
# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி

அஞ்சாதீர்கள்! இதோ! உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்



நத்தார் - புத்தாண்டுச் சிறப்பிதழ்

டிசம்பர் - 2006 - ஜனவரி - 2007

சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் - 2006 - ஜனவரி-2007

மலர்-38 இதழ்-09

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு

**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

# உள்ளே



| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| இரவுச் சூரியன் | - | 02 |
| என்றும் மகிழ்ந்திருப்போம் | - | 03 |
| என்னைப் போல நீங்களும் | - | 05 |
| சிக்குன் குனியா | - | 06 |
| மினி உலகக்கிண்ண கிரிக்கெட் | - | 08 |
| மாணவர் பக்கம் | - | 11 |
| மூதூர் மண்ணின் வாசனை... | - | 13 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 15 |
| மனக்கோலம் | - | 18 |
| தியானம் | - | 21 |
| அழகின் அலங்காரம் | - | 22 |
| உலகம் உய்யும் | - | 25 |
| இலங்கையில் 2006... | - | 26 |
| மட்டக்களப்புத் தமிழகத்தின்... | - | 28 |
| இலக்கிய மஞ்சரி | - | 30 |
| வரவேற்பு | - | 32 |
| சிரிப்பு ஒரு மருந்து | - | 33 |
| விவிலியம் கற்போம் | - | 35 |
| அறிவை வளர்ப்போம் | - | 36 |

விலை : *20/=*

ஆண்டு சந்தா *: 300/=*

(தபாற்செலவு உட்பட)



## இறைவாக்கு

**ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்**

**அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும்.**

(எசாயா 11:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

நத்தார், புத்தாண்டுச் சிறப்பு மலராக, கூடவே பொங்கல் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொண்டு இருமாத இதழாகத் தொண்டன் இம்முறை உங்கள் பார்வைக்கு வருகிறான்.

எதிர்காலம் பற்றிய எந்தவொரு நம்பிக்கைக் கீற்றும் தென்படாத ஓர் இருண்ட சூழ்நிலையில், ஷெல் வீச்சுக்களும், துப்பாக்கி வேட்டுக்களும், மரண ஓலங்களும் மனதைக் குடைந்து கொண்டிருக்கும் ஓர் அவலம் நிறைந்த சூழ்நிலையில் நமது மக்கள் தொடர்ந்து வரும் விழாக்களுக்கு முகம் கொடுக் கிறார்கள்.

விழாக்கள் என்பதே வாழ்வை உசுப்பி விடுகின்ற நிகழ்வுகள்தானே!

'ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்
ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்
ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல்
இருக்கும்.

அவரது ஆட்சியின் உயர்வுக்கும்
அமைதி நிலவும் அவரது அரசின்
வளர்ச்சிக்கும் முடிவு இராது'
(எசாயா 9:6,7)

நம்பிக்கை நிறைந்த இவ் வேத வார்த்தைகள் சோர்ந்து கிடக்கும் மனங்களைத் தட்டி எழுப்பி நிமிர்ந்து நிற்கச் செய்கிறது.

"நான் உங்களோடு இருக்கின்றேன்
நம்பிக்கையோடு நடவுங்கள்"

என்று புத்தாண்டை நோக்கி - ஒரு புது வாழ்வு காண அழைத்துச் செல்கிறது. கடவுள் காட்டும் புது வாழ்வு ஒரு 'மெஜிக்' அன்று. மனித முயற்சிகளைப் புறந் தள்ளிய அற்புதங்களுமன்று. மனித முயற்சிகளோடு -

வெற்றியோடும் தோல்வியோடும்
துன்பத்தோடும் மகிழ்ச்சியோடும்

இரண்டறக் கலந்து உருவெடுக்கின்ற ஒரு முழுமை அது.

மனிதமும் தெய்வீகமும் இரண்டறக் கலத்தலின் விளைவாகப் பிறக்கும் முழுமையை, அந்தப் புதுவாழ்வையே கிறிஸ்துவின் பிறப்பு சுட்டி நிற்கிறது. புத்தாண்டிலே இப்புது வாழ்வைக் காண நாம் நமக்குள்ளே பொங்க வேண்டும். 'பொங்கலோ பொங்கல்' என்று பால் பொங்கினால் மட்டும் போதாது.

நம்மிடத்தே

அன்பு பொங்கட்டும்
நீதி பொங்கட்டும்
தியாகம் பொங்கட்டும்
மன்னிப்பு பொங்கட்டும்
சுய மரியாதை பொங்கட்டும்
விழிப்புணர்வு பொங்கட்டும்
புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை
சமாதான வேட்கை பொங்கட்டும்!

மலரட்டும் புது வாழ்வு!

*Happy Christmas!*
*Happy New Year!*
பொங்கலோ பொங்கல்!




- இணைஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுச் சூரியன்



[நெடுங்கவிதை]

மெல்லிய பனியில்
துகில் விரித்துப்பூமி
தன்னிலை மறந்த கோலம் -

பூமியின் கரைகளிலெல்லாம்
பூக்கோலம் காணுமோர்
புனித இரவு -

மல்லிகையைப் புணர்ந்த காற்று
நறுமணத்தைக் கருவாய்ச்சுமந்து
மெல்லியதாய் பூமியின் மேனியில்
புனுகுபோல் தடவுகிறது -

எங்கும்....
யேசுவன்,
பூமியின் பாவக் கருவறுக்கவந்த
ஞானவாளவன்
புழுதியை ஸ்பரிசிக்கும் அக்கினை -

பரமண்டலத்தில்
வானதூதர் சேனை
மலர் தூவிப் பாதைசமைக்க...
சோடித்த ரதத்தில்
சுந்தர பிம்பத்தின்
பூரண அழகைத்
தோற்கடிக்கும் புறப்பாடு

தேவ புரவிகளின் குளம்பதிர்வில்
பொழுதாவும் பனிப்புழுதிப்படலம் -

இரவுச் சூரியனின்
விடியலைக்காண,
மேகப்படுதாக்களை விலக்கி
ஓரிரு நட்சத்திரப் பெண்களின்
ஊர்வலம்-

இதோ....
மண்ணெனும் மேடையில்
இருட்திரையகல
இன்பியல் நாடகத்தின் துவக்கம் -

பேறுகாலம் வந்து
பூமியின் அடிவயிறு சிவக்க,
பொல்லா வலியின் நடுவே
புனித மரியெனும் இல்லாள்
இறக்கிவைத்தாள்
முத்து -

பூமியைப் புடம் போடவந்த
அருள் வித்து -

சூரியனே நேரில் இறங்கிவர,
தூய மாதவன் கையில்
பரிசுத்த ஒளித்துகளாய்
வைக்கோலைப் பொசுக்காத
வைர அக்கினிக் குஞ்சு -

இவன்....
பாரை உழுதெங்கும்
தேவ அன்பின் விதையை
ஊன்றி விதைக்கவந்த
தேவ உழவன் -

உலகின்
களைகளை வேறாக்கவும்
பதர்களைத் தீயிடவும்
கையில் சிலுவையெனும்
புத்தேர் சுமக்கப்போகும்
அதிசயக் கமக்காரன் -

வாடைக் குளிரில்
சாமக் கிடைகாத்த
எளியவர் தாமோ
முதலில் கண்டார்,
தூதன் உரைத்தவற்றை
மானுடர் செவிவழியே
காற்றில் கலந்துவைத்தார் -

வானிலே கால் முளைத்த
வால்வெள்ளி
பூமியிலே சமைத்தவழி
ஞானிகள் மூவர்
தொழுது வந்து
ஞானம் பெற்று
மாய்ந்தனர் வேற்றுவழி -

வறண்டு கிடந்த மண்ணில்
மழைத்துளியென அருள்சுரந்து
ஊழிகாலப் பெருமழையாய்
வானம் திறந்து வர்ஷிக்க...
நனைந்தனர்
நம்பிக்கையோடிருந்தோர் -

கலங்கிய பூமியோ கருக்கொள்ள,
முளையென நம்பிக்கைப் பயிர்கள்
எழுந்தன, கடினங்களைப் பிளந்து -

இன்னும் மனிதர் வான்னோக்கி
இருகை உயர்த்தி வேண்டினர் -

போரைப் புறந்தள்ளி
அமைதியோ அறுவடைக்காய்க்
காத்திருந்தது.

அந்த இறைமகன் வருகை,
இந்தப் புழுதியின் விடுதலைக்கோர்
உன்னத அடையாளம்.

-அ. ச. பாய்வா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மகிழ்ந்திருப்போம்



இது இருபத்தோராம் நூற்றாண்டு! இன்று மீட்புக்காக ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள் தான் எத்தனை! எத்தனை!

வறுமையிலிருந்து மீட்பு வேண்டும்;
நோயிலிருந்து மீட்பு வேண்டும்;
பாவத்திலிருந்து மீட்பு வேண்டும்;
மரணத்திலிருந்து மீட்பு வேண்டும்.

அலைமோதும் ஆசைகளோடு இன்றைய மனிதர்கள் அலைந்து திரிவதைப் பார்க்கின்றோம். 'உனக்கு மீட்பு அளிக்கிறேன்; உனக்கு விடுதலை தருகிறேன், என்னிடம் வா" என்று அழைக்கும் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி, தொலைபேசி, இன்ரர் நெற், சினிமா, சிடி இவையெல்லாம் ஒருபுறம். "புகைப்பிடியுங்கள், மது அருந் துங்கள், போதைப் பொருள்களைப் பயன் படுத்துங்கள், விரும்புவதையெல்லாம் அனுபவியுங்கள், அப்போது நீங்கள் விரும்பும் விடுதலை உங்களைத் தேடி வரும்" என்று விளம்பரம் செய்யும் மனிதர்கள் மறுபுறம்.

ஒருபுறம் நெருப்பு, மறுபுறம் நாகம். பாவம், மனிதர்கள் எறும்பாய்த் தத்தளித்து துரும்பாய்த் தேய்ந்து கொண்டிருக்கும் நிலையை நாம் கண்கூடாய்க் காண்கின்றோம்.

இப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து நமக்கு மீட்பே கிடையாதா என ஏங்கும் இதயங்களுக்கு இதம் அளிக்க இறைவாக்கினர் எசாயா ஆறுதல் கூறுகின்றார்: "ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள் ளார், ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ 'வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறை வன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும் (எசா 9:6)



எசாயா சுட்டிக்காட்டும் குழந்தை யார்? நற்செய்தி கூறுவதுபோல நம் நடுவே பிறந்திருக்கும் ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பரே, இயேசுவே அக்குழந்தை.

இனி நமக்குத் துன்பமில்லை, துயர மில்லை, இன்னலில்லை, இடையூறு இல்லை. புனித பவுல் அடிகளார் குறிப்பிடுவது போல இயேசு உலக மக்கள் அனைவருக்கும் மீட்பளிக்கும் அருளாகச் செயற்பட பிறந்திருக்கிறார்.

நாம் இப்போது செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே. நம் நடுவே பிறந்திருக்கும் இயேசுவின் பக்கம் சென்று அவரது பாதம் பணிந்து அவரது அருளை நாடவேண்டும். இயேசு பிறப்பு விழாக்கள் எத்த னையோ ஓடி மறைந்துவிட்டன. ஆனால் நம் வாழ்க்கைப் பொழுது இன்னும் விடியவில்லை.

எகிப்திற்குத் திருக்குடும்பம் ஓடியது பற்றிய கதை ஒன்று உண்டு. இக்கதை, இன்னும் நாம் ஏன் விடுதலை அடைய வில்லை என்பதற்கு பதில் சொல்லக்கூடும். யோசேப்பும் மரியாவும் குழந்தை இயேசுவோடு எகிப்து நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தனர். திடீரென கொள்ளைக் கூட்ட மொன்று அவர்களைச் சுற்றிவளைத்தது. அந்தத் திருடர்கள் கூட்டத்துக்குள்ளே தீஸ்மாஸ் என்னும் ஒரு திருடன் இருந்தான். அவன் அன்னை மரியாவின் தங்கக் கைகளிலே தவழ்ந்த வைரக் குழுந்தையைப் பார்த்துவிட்டான். அந்தக் குழந்தை யின் அழகில் மனதைப் பறிகொடுத்தான். மற்ற திருடர்களைப் பார்த்து "இவர்களை ஒன்றும் செய்யாதீர்கள். இவர்களை விட்டுவிடுங்கள்" என்றான். எல்லாத் திருடர்களும் தீஸ்மாசின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

குழந்தை இயேசுவை விட்டுப் பிரிவதற்கு முன் தீஸ்மாஸ் குனிந்து அந்தக் குழந்தையிடம் "என்னை நினைவில் வைத்துக்கொள்; ஒரு போதும் இந்த நேரத்தை மறந்துவிடாதே" எனச் சொல்லிச் சென்றான்.

கதையின்படி தீஸ்மாஸ்தான் பெரிய வெள்ளிக்கிழமையன்று இயேசுவின் வலப்பக்கத்தில் சிலுவையில் தொங்கிய நல்ல கள்ளன்.

அன்றொரு நாள் தீஸ்மாஸ் அவருக்கு விடுத்த வேண்டுகோளை இயேசு மறக்கவில்லை. அந்தக் கள்வனின் விருப்பத்தைக் கல்வாரியிலே நிறைவேற்றி வைத்தார். லூக் 23:43 இல் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பதுபோல் இயேசு நல்ல கள்ளனைப் பார்த்து "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீரென உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார். இன்று குழந்தை இயேசுவைப் பார்த்து நாம் ஒவ்வொருவரும் இயேசுவே என்னை நினைவில் கொள்ளும்" என்று சொன்னால் போதும், நம் வாழ்வில் வழிபிறக்கும், ஒளி பிறக்கும், வாழ்வு பிறக்கும்.

இந்தக் கிறிஸ்மஸ் விழா எது மாதிரியும் இல்லாத புது மாதிரியான விழாவாக அமையட்டும். குழந்தை இயேசுவோடு நாம் பேசுவோம். நாம் அவரோடு பேசி, அவரது ஆசீரை மனமுவந்து கேட்காதவரை அவரின் பிறப்பால் நமக்கு எந்தப் பயனும் விளையப்போவதில்லை.

எல்லாருடைய பெயராலும் மரியா உதவி கேட்டபோது கானாவூரில் அருளடையாளம் நிகழ்ந்தது, வறுமை மறைந்தது, மகிழ்ச்சி பிறந்தது.

இரண்டு பிறவிக் குருடர்கள் "தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்" என்று கத்திய போது நோய் மறைந்தது, மகிழ்ச்சி பிறந்தது.

பாவியொருத்தி கண்ணீரால் இயேசுவின் கால்களைக் கழுவியபோது அவளுக்குப் பாவ மன்னிப்புக் கிடைத்தது, பாவம் மறைந்தது, மகிழ்ச்சி பிறந்தது.


மார்த்தாவும் மரியாவும் அழுததால் இலாசர் கல்லறையிலிருந்து உயிரோடு வெளியே வந்தார். உயிர்ப்பு மலர்ந்தது, மகிழ்ச்சி பிறந்தது.

அன்று இஸ்ராயேல் நாட்டில் வலம் வந்த இயேசு, இன்று நம் நடுவிலே பிறந்திருக்கிறார். நம் குழந்தை இயேசுவுக்கு நமது இதயத்தைத் திறப்போம், நமது குறைகளை அவரிடம் எடுத்துச் சொல்வோம். கேளுங்கள் கொடுக்கப்படும், என்ற இறைவன் நம் குறை கேட்டு, குறை நீக்கி நமது வாழ்வை,

வளர்பிறை போல் வளர வைப்பார்;
வாழைபோல் தழைக்க வைப்பார்;
கரும்புபோல் இனிக்க வைப்பார்;
சந்தனம்போல் கமழ வைப்பார்;
நாம் என்றும் மகிழ்ந்திருப்போம்.

-அருள் தந்தை
எப். அந்தோனிசாமி

# ஆயரே வாழ்க!



மெல்லிய தேகம், மெல்லிய முறுவல்
சொல்லியே மாளா சுமைகள், சோலிகள்
சமயம், சாதியம், சமூகம், அரசியல்
இயற்கை அனர்த்தம். இரவும் பகலும்
எத்தனை பிரச்சினை இவர் தலைமேலே!
நலிவே இல்லா நம்பிக்கையோடு
நல்லது செய்யத் துடிக்கும் நெஞ்சம்
நாடிவரும் நம் மக்களுக்கெல்லாம்
நடுநிலையாளர் இவரே தஞ்சம்
இயேசுவின் பெயரால்
இவர் செய்யும் பணிகள்
சமயம் கடந்த சமரசப் பணியே
டிசம்பர் ஒன்பது இவர் வயதெழுபதாம்
உம்பொழுதென்றும் ஓயாது வளரும்!
வையகம் வாழ வாழும் எவர்க்கும்
வாழ்க்கை என்பது வசந்தந்தானே!
நிறைந்த மனதோடு வாழ்த்துவோம் ஆயரை
வாழ்க! வாழ்க! வாழ்க பல்லாண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் போல நீங்களும்

கிறிஸ்மசுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற நிலையில் பாலன் குடில் அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள் சினேகா.

சணல் கயிறுகள் கட்டி, அதில் கறுப்பு நிற கடதாசிகளைப் படரவிட்டு, குகைபோன்று செய்து, குகைக்குள்ளேயே வைக்கோல் பரவி, இயேசு, மரி, சூசை, இடையர்கள், மாடுகள், ஆடுகள் பொம்மைகளை வைத்து, குகைக்குமேலே தேவதூதரின் உருவத்தைத் தொங்கவிட்டு, கண் சிமிட்டும் மின் விளக்குகளால் அலங்கரித்து...

அப்பாடா... ஒரு வழியாகப் பாலன் குடில் அமைக்கும் வேலை முடிந்து விட்டது. தான் அமைத்த பாலன் குடிலைப் பார்த்து பெருமிதம் கலந்த மகிழ்ச்சி ஏற்பட்டது அவளுக்கு

சினேகா... சினேகா... பிள்ள..., அம்மாதான் கூப்பிடுறா போல... மனசுக்குள் நினைத்த வாறு... வாறனம்மா...

பக்கத்துவீட்டுச் சோதி மாமிர மகள்... அதுதான் உன்னோட படிக்கிற மெடோனா வந்திருக்கிறாள். உன்னட்ட என்னவோ கேக்க வேணுமாம்...

அம்மா கூற ...சரி.. நான் போய் பாக்கிறன்.... கூறிக்கொண்டே முன் வாயிலை நோக்கிச் சென்றாள் சினேகா.

மெடோனாவைக் கண்ட சினேகா பார்வையாலேயே வினாவினாள்.

ம்... சினேகா எனக்கு ஒரு உதவி செய்ய வேணும்... தயங்கித் தயங்கியே கேட்கிறாள் மெடோனா.

என்ன செய்ய வேணும்?...

என்ர சைக்கிள் பஞ்சராயித்து கிளாசுக்குப் போகவேணும்... உம்மட சைக்கிள கொஞ்சம் தருவீரா?

ஒரு பக்கக் கதை



சைக்கிளா...ஆ உமக்குத் தந்தா நான் என்னண்டு போறது?... நானும் கோயிலுக்குப் போகவேணும்...

அப்பிடியா!... அப்ப சரி நான் வாறன் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறாள் மெடோனா.

என்னவாம் பிள்ள ... அம்மா கேட்க...

எண்ட சைக்கிளத் தரட்டாம், கிளாசுக்குப் போகவாம்.

நீ குடுக்கல்லியா!

ம்.. நல்லாக் குடுப்பன் அவைக்கு.... அண்டைக்கு நோட்ஸ் கொப்பி தாவெண்டு கேட்க, இல்லண்டு சொல்லிப் போட்டாள்... இப்ப வாறா என்னட்ட சைக்கிள் கேட்டு...! சொல்லிக் கொண்டே பாலன் குடில் பக்கம் நடந்து சென்ற சினேகா பாலன் குடிலை நோட்டம் விட்டாள்.

வைக்கோல் அணையில் பாலன் இயேசு...

அந்தக் கடவுளின் மகன்... உங்கள் குற்றங்களை எல்லாம் மன்னித்து உங்களை என்னோடு இணைத்துக் கொண்டு, உங்களுக்காக வாழ்வதற்காகவே வந்துள்ளேன். நான் உங்கள் பாவங்களை மன்னிப்பது போல் நீங்களும் ஒருவர் ஒருவருடைய குற்றங்களை மன்னியுங்கள்...

அந்த இயேசு பாலனே தன்னிடம் பேசுவதுபோல் ஒரு பிரமை சினோகாவுக்கு, அப்படி என்றால் நான்...

சினேகா!... எங்க பிள்ள போறா...

வாறனம்மா.. சைக்கிள மெடோனாட்ட குடுத்துப் போட்டு வாறன். சைக்கிளைத் தள்ளிக் கொண்டே நடக்கிறாள் சினேகா.

- பாரதி -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்குன் குனியா

## (Chikun gunya)

சாதி, இன, மத, மொழி, வயது, பால் என்ற வேறுபாடு இன்றி இலங்கையில் உள்ள சகல மக்களையும் தற்போது வருத்தி வருகின்ற ஒரு வகைக் காய்ச்சலாகும். இது உடல் உபாதையை ஏற்படுத்துமே அன்றி உயிரிழப்பை ஏற்படுத்தாது.



இந்நோய் மிகவும் பழமையானது. பொதுவாக ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளைப் பாதித்துள்ளது. தன்சானியா நாட்டில் 1952ம் ஆண்டு முதல் நோயாளி கண்டறியப்பட்டார்.

சிக்குன் குனியா என்ற சொல் ஆபிரிக்க நாட்டு 'மேக் கொண்டி' மொழியாகும். தமிழில் இச் சொல்லுக்கு வளைத்தல் அல்லது உருக் குலைத்தல் எனப் பொருள்படும். ஏனெனில் இந்நோயினால் ஏற்படும் உடல்நோவு பாதிக்கப்பட்ட நோயாளியை உருக்குலைத்து அல்லது நிலை குலைய வைக்கும்.

**நோய்க் காரணியும் பரப்பப்படும் முறையும்:**

இது வைரசினால் ஏற்படுத்தப்படும் நோயாகும். நுளம்பின் மூலம் பரப்பப்படும்.

**நோய்க்காரணி:** அல்பா வைரஸ் (Alpha virus)

பரப்பும் காரணி:- ஈடிஸ் எஜிப்டை (Aedes aegypti)எனப்படுகின்ற நுளம்பு. இந் நுளம்பே உயிராபத்தை ஏற்படுத்த வல்ல டெங்கு நோயையும் பரப்புகின்றது. பொதுவாக இந் நுளம்புகள் பகல் பொழுதிலேயே கடிக்கவல்லன. இரவில் இவற்றின் நடமாட்டம் மிகக்குறைவு. இந் நுளம்பின் உடலமைப்பு வரிப்புலியின் அமைப்பை ஒத்ததால் இதற்கு "புலிமுக நுளம்பு" என்ற பெயரும் உண்டு.

**நோய் அறிகுறிகள்:**

இந் நோய் காய்ச்சலோடு கூடியது. எனவே காய்ச்சலிற்குரிய அறிகுறிகள் பொதுவாகக் காணப் படும். இருந்த போதும் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் மூட்டுக்கள் அதிக உளைவை ஏற்படுத்துவதனால் நோயாளிகள் வலியால் நடக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுவார்கள்.

**சிகிச்சை முறைகள்:**

பயப்படத்தேவையில்லை, உயிராபத்தை பொதுவாக ஏற்படுத்துவதில்லை. பொதுவாக இது வைரசால் பரப்பப்படும். நோய்களிற்கு சிகிச்சை இல்லை. எமது உடலே அதற்குரிய நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கி நோயைக் கட்டுப்படுத்துவதுடன் ஒரு முறை ஏற்பட்ட நோயானது மீண்டும் ஏற்படாதவாறு இந்நோய் எதிர்ப்புச் சக்தி உதவுகின்றது.

இருந்த போதும் இந்நோயினால் ஏற்படும் உபாதைகளிற்கு சிகிச்சை தேவைப்படலாம்.

பொதுவாக பாதிக்கப்பட்டவரிற்கு

I. பூரண ஓய்வு தேவை.
II. வலிநிவாரணிகள் (பனடோல், பனடீன்) காய்ச்சல் வலிகளுக்குப் பயன்படுத்தலாம்.
III. போதிய நீராகாரமும் தேவை.
IV. சாதாரண உடற்பயிற்சி மூட்டுநோவுகள், தசைப்பிடிப்புகளுக்குப் பயனளிக்கும்.

பொதுவாக விடுதியில் நின்று சிகிச்சை பெற வேண்டிய தேவையில்லை.

பாதிக்கப்பட்ட மக்களில் பொதுவாக பின்வருவன காணப்படலாம்.

I. அதிகவெப்பநிலை 39° C (102.2°F)
II. உடலில் குறிப்பாக முண்டப்பகுதி (வயிறு, முதுகு) அவயவங்கள் (கை, கால் போன்ற வற்றில் காணப்படும் தழும்புகள் (Rashes)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. அதி தீவிர மூட்டுநோவுகள், தசை நோவுகள் (பொல்லால் அடித்த நோவுகள் போன்று காணப்படலாம்)
IV. அதிக தலையிடி
V. கண்நோய்
VI. வெளிச்சத்தைப் பார்க்கமுடியாமை
VII. நித்திரையின்மை
VIII. சிலவேளைகளில் ஓங்காளம், வாந்தி என்பனவும் காணப்படலாம்.

நோயின் தீவிர நிலையானது பொதுவாக 5-7 நாள்வரை காணப்படலாம். சிலவேளைகளில் கூடிக் குறையலாம்.

**தடுப்பு முறைகள்:**

வருமுன் காத்தலே மிகச்சிறந்த தடுப்பு முறையாகும். அதாவது வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும். நோய் பரவுவது நுளம்புக் கடியால் மட்டுமேயாகும். எனவே நுளம்புக் கடியில் இருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டும்.

**I. நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தல்:**

பொதுவாக சிரமதான அடிப்படையில் எமது ஊரில் நீர்தேங்கி நிற்கக்கூடிய இடங்களை இல்லாமல் செய்தல் வேண்டும்.

**II. நுளம்புகளை அழித்தல்:**

இதற்கு இரசாயனமுறைகள், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பாவிக்கலாம்.

**III. நுளம்புக் கடியில் இருந்து பாதுகாத்தல்:**

நுளம்பு வலை, நுளம்புத்திரி, காற்றாடி, உடலில் பூசப்படும் சில இரசாயனங்கள் மூலம் இதனை மேற்கொள்ளமுடியும். பொதுவாக மாரி காலங்களில் வேறு வைரஸ் நோய்களும் ஏற்படலாம்.

**— Dr. ஜூடி ரமேஷ் ஜெயக்குமார் —**

**(டாக்டரிடம் கேளுங்கள்.. தொடர் கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்)**

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி-3**

*பரிசு பெறுவோர்*

1. முதலாம் பரிசு =300/=
அ.நிரோஜன்,
8/21.A செல்வநாயகம் வீதி,
1ம் குறுக்கு,
மட்டக்களப்பு.

2. 2ம் பரிசு =200/=
செல்வி. வி. அபித்ரா,
மே/பா.மு. விமலநாதன்,
1ம் பிரிவு,
மண்டூர்.

3. 3ம் பரிசு = 100/=
கே.நிதர்சனா,
18, கோணேசபுரம்,
உவர்மலை,
திருகோணமலை.

# ஜனவரி

புதுவருடப் பிறப்பை ஜனவரி முதலாம் திகதியாக 1600 இல் ஸ்கொட்லாந்து மாற்றியது. 1751ல் தான் இங்கிலாந்து மாற்றியது. அதற்கு முன்னால் மார்ச் 25தான் புதுவருடமாகக் கொண்டாடினர்.

உலகில் உள்ள மற்ற எந்த நாட்டையும் விட ஜமைக்கா நாட்டில் அதிக ஆலயங்கள் உண்டு.

இயேசுவின் மீதுள்ள விசுவாசம் சுதந்திரச் சூழலில்தான் வளரும். மத சகிப்புந்தன்மையோடும், திறந்த மனதோடும், பிற மதத்தினரையும் கலாசாரத்தையும் உடையோரை ஏற்கவேண்டும் என்று ஜெர்மனிக்கான வத்திக்கான் தூதரிடம் தொவித்தார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற்.

ஐ.நா.சபைக் கூட்டத்தில் வத்திக்கானின் முன்னால் வெளியுறவு அமைச்சர். ஜீயோவானின் பேசுகையில் வியாபார சீர்திருத்தம் தனிமனிதருடைய முழு நலனுக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. நாளைய அமைதி இன்று நீதியை நிலை நாட்டுவதைப் பொறுத்தே அமையும் என்று குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

International Cricket Council

# ICC CHAMPIONS
## மினி உலக கிண்ண கிரிக்கெட்

— ஜோனா —



கிரிக்கெட் என்ற வார்த்தை ஆசிய நாடுகளில் சிறியோர் முதல் பெரியோர்வரை பெரும் பாலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு வார்த்தையாக மட்டுமல்லாமல் மிகப் பெரும் களியாட்டமாகவும் கிறிக்கெட் போட்டிகள் திகழ்கின்றன. அந்த வகையில் கடந்த October மாதம் முதல் நவம்பர் மாதம் 5ம் திகதிவரை நடைபெற்று முடிந்த ICC CHAMPIONS போட்டிகள் உலகத்தில் உள்ள பெரும்பாலான கிறிக்கெட் இரசிகர்களுக்கு பெரு விருந்தாக அமைந்து விட்டன.

Test அந்தஸ்துப் பெற்ற நாடுகளிடையே இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற மையினால் இதனை மினி உலகக் கிண்ண கிறிக்கெட் போட்டிகள் என்று அழைக்கின்றனர். இதன் சிறப்பம்சம் என்னவென்றால் மிகப் பலம்வாய்ந்த உலகக் கிறிக்கெட் அணிகள் மாத்திரமே பங்கு பற்றுவது என்று கூறலாம். காரணம் உலகக் கிண்ண கிறிக்கெட் போட்டிகளில் Test அந்தஸ்துப் பெறாத பலம் குன்றிய அணிகளும் பங்கு பற்றுவதனை அவதானிக்கலாம். மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் பல அணிகள் சம்பியன்ஸ் கிண்ணத்தைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது. காரணம் நான்கு நீண்ட வருடங்கள் காத்திராமல் ஆக இரண்டு வருடங்கள் மட்டுமே காத்திருக்க வேண்டும்.



ஆரம்பப் போட்டிகளில் தரவரிசையில் 6ம் நிலைக்குக் கீழே உள்ள அணிகள் நான்கும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு இரண்டு அணிகள் ஏனைய 6 அணிகளுடன் கிண்ணத்தை வெல்லும் கனவில் மிதந்தன. அந்த வகையில் இலங்கை அணி மிகவும் சிறப்பாக மூன்று போட்டிகளில் வெற்றி பெற்று ஒரு பலம் மிக்க அணியாக உருவெடுத்தது. அத்துடன் மேற்கு இந்தியத்தீவுகள் அணி இரண்டு வெற்றிகள் பெற்று ஏனைய அணிகளுடன் மோதுவதற்குத் தயாரானது. கடந்தமுறை நடைபெற்ற போட்டிகளில் மேற்கு இந்தியத் தீவுகள் அணிதான் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்து சம்பியன்ஸ் ஆனது. எனவே இம்முறையும் கிண்ணத்தைத் தக்க வைப்பதற்குப் போராடும் யுக்தியுடன் அது காணப்பட்டது.

பலம்வாய்ந்த 8 அணிகளும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு சம்பியன்ஸ் போட்டிகள் ஆரம்பமாகின. இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்ரேலிய அணிகள் ஒரு குழுவிலும், இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, தென் ஆபிரிக்க அணிகள் மறு குழுவிலும் இடம் பெற்றன. குழுப் போட்டிகளில் தங்கள் பலத்தைக் காட்டிய மேற்கு இந்தியா, நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா, அவுஸ்ரேலிய அணி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஆசிய நாட்டு அணிகளை வீட்டுக்கு ஓடச் செய்தன. இதுவரையில் கிறிக்கெட் போட்டிகளில் பெரிய அளவிலான சுற்றுத் தொடர்கள் எதிலும் இடம் பெறாத சம்பவம் இப்போட்டிகளில் நிகழ்ந்தது. அதாவது எந்தவொரு ஆசிய நாட்டு அணியும் அரையிறுதிக்குத் தெரிவாகவில்லை. அதிலும் போட்டிகளை நடத்திய இந்திய அணியும் தெரிவாகாமை அந்நாட்டு பலகோடிக் கிறிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு மிகப் பெரும் ஏமாற்றமாகவே அமைந்திருந்தது. உலகக் கிறிக்கெட் சபைகளில் மிகப் பெரும் பணம் படைத்த இந்திய கிறிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இது மிகப் பெரும் ஏமாற்ற மாகவே திகழ்ந்தது.

அரை இறுதிப்போட்டிகளில் முதலாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணியை எதிர்த்தாடிய நியூஸிலாந்து அணியினர் போராட்டத்தின் மத்தியில் வெற்றியை இழந்தனர். இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணியை எதிர்த்தாடிய மேற்கு இந்திய அணியினர், மிக இலகுவாக வெற்றியைத் தம் வசப்படுத்தினர்.

அனைவரும் எதிர்பார்த்த அந்த இறுதி நாளும் வந்தது. அவுஸ்ரேலிய அணியினர் தங்க ளுக்கே உரிய ஆக்ரோஷத்துடன் விளையாடி மேற் கிந்திய அணியினர் ஆரம்பத்தில் பந்துகளை எல்லைக் கோட்டுக்கு வெளியேயும், எல்லைக்கோட்டுக்கு மேலாகவும் விளாசி அடித்து அதிர்ச்சி ஏற்படுத்திய போதும் களைத்துவிடாமல் மிக சொற்ப ஓட்டங் களுக்கு (138) அனைவரையும் ஆட்டமிழக்கச் செய்து தங்கள் தரப்பில் (2) விக்கட்டுக்களை மாத் திரம் இழந்து (D/W) முறைப்படி 8 விக்கட்டுக்களால் வெற்றிவாகை சூடினர். ஆட்ட நாயகனாக பந்து வீச்சில் 2 விக்கட்டுக்களைப் பெற்று துடுப்பாட்டத்தில் அரைச்சதம் அடித்த, வளர்ந்து வரும் சகல துறை ஆட்டக்காரரான சேன்வட்சன் தெரிவானர். இந்தத் தொடரின் நாயகனாக முச்சதம் அடித்த மேற்கிந்திய அணியைச் சேர்ந்த கிறிஸ்கேல் தெரிவானர்.

எப்பொழுதும் சர்ச்சைகளில் மாட்டிக் கொள் ளும் அவுஸ்ரேலிய அணியினர் இம்முறையும் வசமாக மாட்டிக் கொண்டனர். இறுதிப்போட்டி பரிசளிப்பின்போது, வெற்றிக் கிண்ணத்தைக்



- அதிகபட்ச ஓட்டம் - கிறிஸ் கேல், மேற்கு இந்தியத்தீவுகள்
- அதிகபட்ச விக்கட்டுக்கள் - பிரண்டன்ரெய்லர், மேற்கு இந்தியத்தீவுகள்
- அதிகபட்ச சதங்கள் - கிறிஸ்கேல், மேற்கு இந்தியத் தீவுகள்
- இரண்டு சதங்கள் - உப்புல் தரங்க, இலங்கை
- குறைந்த ஓட்டங்கள் பெற்ற அணி - மேற்கு இந்தியத் தீவுகள்
- அதிக ஓட்டங்கள் பெற்ற அணி - இலங்கை
- சிறந்த பின் வரிசை வீரர்களைக் கொண்ட அணி - நியூஸிலாந்து
- ரசிகர்களை ஏமாற்றிய அணி - இந்தியா
- பலம் வாய்ந்த பந்து வீச்சாளர்களைக் கொண்ட அணி - அவுஸ்திரேலியா
- சிறந்த மத்திய வரிசை வீரர்களைக் கொண்ட அணி - இங்கிலாந்து
- எப்பொழுதும் அதிர்ஷ்டம் இல்லாத அணி - தென் ஆபிரிக்கா
- போராட்ட குணம் உள்ள அணி - பாகிஸ்தான்

அவுஸ்ரேலிய அணியும், மேற்கிந்திய அணி யும் இறுதியாட்டத்திற்குத் தெரிவானமையினால் ரசிகர்களிடையே இறுதிப்போட்டியைப் பார்ப்பதற்கும் இறுதி முடிவுகளைத் தெரிந்து கொள்வதற்கும் பரபரப்பு ஏற்பட்டது. ஏனெனில் அவுஸ்ரேலியா தற்போதைய உலக சம்பியன்ஸ்; மேற்கிந்தியா முன்னால் மினி உலக சம்பியன்ஸ். அவுஸ்ரேலிய அணியிடம் மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற அளவில்லாத ஆசை மேலோங்கி இருந்தது. காரணம் அவர்கள் இறுதிப்போட்டி நடக்கும் வரையில் அக்கிண்ணத்தை வென்றிருக்க வில்லை. மறுபக்கம் மேற்கிந்திய அணியினர் எப்படியும் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று முயற்சியில் ஈடுபட்டனர்.

கொடுத்த இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரும் இந்திய மத்திய அரசின் வேளாண்மைத்துறை அமைச்சருமான சரத் பவாரை மேடையிலிருந்து தள்ளாத குறையாக வெளியேற்றியமையை பல கமராக்கள் பல கோணங்களில் படம் பிடித்து வெளிப் படுத்தின. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் பெரு மளவில் கடுமையான எதிர்ப்புக்கள் அவுஸ்ரேலிய அணி யினருக்கு எதிராகக் கிளம்பின. வேறு வழியின்றி அவுஸ்ரேலிய அணி சார்பாக அதன் தலைவர் ரிக்கி பொண்டிங் சரத்பவாரிடம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு மன்னிப்புக் கோரினார். இதனைப் பெரிது படுத்த விரும்பாத சரத் பவாரும் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு இந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்குச் செய்திகள்

- ✓ 90 ரூபாய் (90 கியாத்) நோட்டு அச்சடிக்கும் ஒரே நாடு மியன்மார். இங்கு '9' என்ற எண் புனிதமானது என்ற எண்ணமே இதற்குக் காரணம்

- ✓ புதன் (MERCURY) கோளில் ஒரு வருடத்துக்கு பூமி வருடக் கணக்கின் படி மொத்தம் 88 நாட்கள்.

- ✓ ரயில் எஞ்சின் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டபோது அதனை மக்கள் செல்லமாக 'இரும்புக்குதிரை' என்று அழைத்தனர்.

- ✓ ஓவியராக இருந்தாலும் லியனார்டோ டாவின்சி விஞ்ஞானிகள் வரிசையிலும் சேர்க்கப்படுபவர்.
இன்றைய இயந்திரங்களுள் பெரும் பாலானவை அவரது கற்பனையில் ஓவியங்களாக உருவானவையே.

- ✓ ஜன்கோதாபே (Junko Thabei) இந்த ஜப்பானியப் பெண்தான் முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர். வருடம் 1975 மே 16.

- ✓ உலகின் மிகப்பெரிய மீடியா நிறுவனத்தின் பெயர் AOL TIME WARNER.

# இயேசு பிறந்தார்



சமாதானம் கொண்டு வந்தார்
யேசுபரன் இன்று - அவர்
பாதம் தொழுபவர்கள்
ஜெயம் பெறுவார் நின்று

நல்லமனம் கொண்டவர்கள்
பேறு பெற்றார் என்று - எம்
வல்லதூதர் வாழ்த் துரைத்தார்
இனிய கீதம் கொண்டு

மாடடையில் மன்னர் யேசு
மனிதனாகப் பிறந்து - மாந்தர்
மடமை எல்லாம் நீக்கிச்சென்றார்
பொன் மொழிகள் வரைந்து

சமாதானம் சரிந்தாலும்
மீண்டும் அது பூக்கும் - இங்கு
பரன்பாதம் பணிந்து நின்றால்
நிம்மதி தலை சாய்க்கும்

தாழ்மை கொண்ட மன்னனது
வாழ்விடத்தைப் பாரு - நம்
அகந்தை எல்லாம் அழிவதற்கே
பிறந்துவந்தார் கேளு

மனுக்குலத்தை மீட்க வென்று
மனிதனானார் அன்று - இங்கு
மனுக்குலத்தை இணைப்பதற்காய்,
தேடி வந்தார் இன்று

- வயலற் சந்திரசேகரம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விண்ணரசும் இயேசுவின் புதுமைகளும்



விண்ணரசினை அறிவித்து, அதனை இவ்வுலகில் ஸ்தாபிக்க வந்த கிறிஸ்துவின் நற்செய்தியில், அவரது வாழ்வும் போதனையும், அவர் செய்த புதுமைகளோடு பின்னிப் பிணைந்து இருப்பதை காணக்கூடியதாயுள்ளது. வேதாகமத்தில் புதுமைகள் மனித சரித்திரத்தில் இறைவனுடைய சிறப்பான தலையீட்டைக் குறித்து நிற்கின்றன.

கிறிஸ்துவின் வாழ்விலே அவர் தன் இறைபணியினை எண்பிக்கவும், மக்கள் மேல் இறைவனுக்குள்ள அனுதாபத்தினை, அன்பை வெளிப்படுத்தவும், தாமே உலகின் இரட்சகர், அரசர், ஆண்டவர் என்பதைக் காட்டவும் புதுமைகள் செய்ததாகவும் தாமே மெசியா எனவும் தாம் ஸ்தாபிக்க வந்ததே இறையரசு எனவும் அத்தாட்சிப்படுத்த புதுமைகள் செய்ததைக் காணமுடிகிறது. எனவே தான் நற்செய்தியாளரான யோவான், இப்புதுமைகளை அருங்குறிகள், அரும்பெரும் செயல்கள் என அழைத்துள்ளார்.

மேலும் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் இயேசுவிடம் வந்து 'வரப்போகிறவர் நீர் தாமோ அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமோ' எனக் கேட்டபோது இயேசு நீங்கள் கண்டதையும், கேட்டதையும் போய்க் கூறுங்கள் என்கிறார். அவர், அங்கு வல்ல பல செயல்கள் செய்து கொண்டிருந்ததை அவர்கள் காண்கிறார்கள். தாமே மெசியா என்பதற்கு இவையே அடையாளங்கள் எனக் கூறுகிறார். மெசியாவின் காலத்தில் நிகழ்த்தப்பட்ட இப்புதுமைகள், அருங்குறிகள் அவர் ஸ்தாபிக்க வந்த விண்ணரசானது வந்து விட்டது என்பதற்கு அடையாளமாகும் என்பதைக் கூறுகிறது. உ+ம் மத் 12.28 இல் இயேசு குருடும் ஊமையுமான பசாசை துரத்தியபோது, இப்புதுமை வழியாய் விண்ணரசு நெருங்கி விட்டது என்பதைக் காட்டுகிறார். அசுத்த ஆவிகள் இவ்வுலகை விட்டுத் துரத்தப்படும் போது இறையரசு மலர்கிறது என்பதை இயேசு இப்புதுமை மூலம் கூறுகிறார். இவ்வாறு கிறிஸ்து ஆற்றிய புதுமைகள், அவற்றைக் கண்டவர்கள் மத்தியில் அவரைக்குறித்து பல வகையான விளைவுகளை ஏற்படுத்தியது. ஒரு சிலர் இயேசுவை மாபெரும் இறைவாக்கினராகக் கண்டனர், சிலர் இறைவன் அவர் மூலம் செயற்படுவதைக் கண்டனர், வேறுசிலர் பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலாகக் கண்டனர், இன்னும் சிலர் அசுத்த ஆவிகள் செயற்படுவதாய்ப் பார்த்தனர், வேறு சிலர் இயேசு செய்த இப்புதுமைகளால் மனக்கடினமுற்று, அவரை அழித்துவிடத்திட்டம் போட்டனர். இவ்வாறு இயேசு செய்த புதுமைகள் பல கருத்துக்களையும் கொடுத்தது. இதனால் இயேசு எல்லா இடங்களிலும் புதுமைகள் செய்ய விரும்பவில்லை. விளைவுகள் வேறுபட்டபடியால் பல இடங்களில் தவிர்த்து கொள்கிறார். விண்ணரசின் அடையாளமாகிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இயேசுவின் புதுமைகள் இன்றும் எம்மத்தியில் நடந்து கொண்டேதான் இருக்கிறது. இயேசுவின் புதுமைகளை நான்கு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

உ+ம்:-

- ❖ இயற்கைபற்றிய புதுமைகள்
  - o புயலை அடக்குதல் (மாற் 4:35-41)
- ❖ குணமாக்கும் புதுமைகள்
  - o பிறவிக்குருடன் (யோ 9:1-12)
- ❖ பேய் ஓட்டும் புதுமைகள்
  - o கெரசேனர் நாட்டில் (மாற் 5:1-20)
- ❖ உயிர்ப்பிக்கும் புதுமைகள்
  - o இலாசர் உயிர் பெறல் (யோ 11:1-44

எனவே இயேசுவால் ஆற்றப்பட்ட இத்தகைய பலதரப்பட்ட புதுமைகளால் தம்மைப்பற்றி, அயலானைப்பற்றி, இறைவனைப் பற்றிய உண்மைகளை அறியாமல் குருடர்களாய் வாழ்பவர்களின் கண்கள் திறக்கப்படுகின்றன. சரியான பாதையில் செல்லாதோருக்கு நேர் வழியைக் காட்டுவதாகவும், பாவச்சேற்றில் வாழ்பவர்கள் திருந்தி வாழவும், இறைவனின் குரலுக்குச் செவி கொடாதோர் செவிமடுக்கவும் வழி சமைத்துக் கொடுத்தது. முக்கியமாய்ப் பாவத்தில் வாழ்ந்தோர் புது வாழ்வு பெறவும் வழி காட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாய் இறைவனின் இரக்கத்தினையும், அன்பினையும் வெளிப்படுத்துவதாகவும், விண்ணரசின் அடையாளங்களாகவும் இப்புதுமைகள் யாவும் அமைந்தன.

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணக வாழ்வு
**05-05-1924**

விண்ணக வாழ்வு
**12-12-2005**

## அமரர். அருளன் இன்னாசி

காலம் மறைந்தாலும் கவலை மறைவதில்லை
ஞாலத்தில் மறைந்தாலும் ஞாபகம் மறையவில்லை
தோற்றம் மறைந்தாலும் துயரம் மறையவில்லை
பார்வையில் மறைந்தாலும் பாசங்கள் மறையவில்லை.

உங்கள் திருமுகம் காணாது ஓராண்டு ஓடிவிட்டது
ஆனால் இத்தனை உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைப்பதற்கு ஈடாகுமா?
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில்
என்றென்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில்
நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(யோவா 11/25)


உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்;
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

குருமடவீதி, திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் மண்ணின் வாசனை முகாம்களிலும்...




இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் உறவினரது வீடுகளிலும் தஞ்சமடைந்து வாழும் மூதூர்த் தமிழ் மக்களைச் சந்தித்தோம்.

இவர்களை ஆன்மீக ரீதியிலும், சமூகநல ரீதியிலும் திருகோணமலையில் பராமரித்து வரும் மூதூர் உதவிப் பங்குத் தந்தை அருட்பணி ஜெயகாந்தனும் இச் சந்திப்பின் போது உடனிருந்தார். மட்டக்களப்பில் இவர்களது ஆன்மீக காரியங்களை அருட்பணி இயுஜின் போல் ஜொனதன் அடிகளே கவனித்து வருகிறார். இவர்களது தற்போதைய நிலையைப் பார்த்த போது "எப்படி இருந்தார்கள்! இப்படி ஆகிவிட்டதே" என்ற மன உணர்வோடு நமது கண்களே நம்மை அறியாமல் கசிந்தன; உள்ளமும் உருகியது. ஏனெனில் மூதூர்ப் பிரதேசம் அதற்கே உரித்தான செழிப்பம்சங்களோடு நீர் வளமும், நில வளமும் கொண்டு தன் மக்களைச் செழுமையோடு வாழ வைத்த பிரதேசமாகும். இந்த நிலம் கொடுத்த செழுமைகளோடு மக்களும், கல்வி அறிவிலும், செல்வச் செழிப்பிலும் கலை வளர்ச்சியிலும், பண்பாட்டு உயர்ச்சியிலும் பெயர் பதித்து முத்திரை குத்தியவர்கள் என்பது நாடறிந்த உண்மையாகும்.

கடந்த காலத்தில், சம்பூர்ப் பிரச்சனை மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையே தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற மோதல்கள், அத்தோடு சகோதர இனத்தவராகிய முஸ்லிம் மக்களோடு ஏற்பட்ட கசப்புணர்வுகள், சந்தேகக் கண்ணோட்டங்கள் இவர்களை இப்படியான அவல நிலைக்குத் தள்ளி இருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். இப்பேற்பட்ட தாக்கங்களால் மூதூர்த் தமிழ் மக்களில் பலர் ஏற்கனவே மூதுரை விட்டு வேறு இடங்களுக்கு நிரந்தரமாகவே சென்று விட்டார்கள் என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

அண்மையில் நிகழ்ந்த சம்பூர்ப் பிரச்சினையின் போது பெருவாரியாக மக்கள் வெளியேறிய வேளையில் ஏற்பட்ட அனுபவத்தை இவர்கள் விவரிக்கையில் இப்போது சுவாரசியமாய் இருந்தாலும் கூட சிறிய குழந்தை தொடங்கி தள்ளாடும் கிழவிவரை சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்திருக்கிறார்கள். பயங்கரமான ஒரு போர்ச் சூழலை சந்தித்திருக்கின்றார்கள் என்பது வெளிச்சமாகின்றது. இந்தக் கொடூரமான அனுபவத்தை அப்பமுக்கில்லாமல் முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் சேர்ந்தே அனுபவித்திருக்கின்றார்கள் என்பதும் உண்மையே.

இவ்வாறு அந்தரித்து, அல்லோலகல்லோலப்பட்டு, உறவுகளை இழந்து, சொந்தங்களைப் பிரிந்து, சொத்துக்களைப் பறிகொடுத்து, உடுக்கத் துணிமணி இல்லாமல் காய்ந்து போன வயிற்றோடு, பேரிடியைத் தாங்கிய மனக்காயங்களோடும், உடல் உபாதைகளோடும் பிறந்து வளர்ந்த சொந்த மண்ணை விட்டு வெளியேறி, பிற ஊர்களுக்கும், மாவட்டங்களுக்கும் வந்தபோது அவ்விடத்து மக்கள் தங்களை உபசரித்ததையும் பல உடனடித் தேவைகளை வழங்கியதையும் இவர்கள் நன்றியுணர்வோடு தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக பாடசாலைகளைத் தந்துதவிய அதிபர்களையும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களையும் மனதார மெச்சுகின்றார்கள். மனித நேயம் இன்னும் சாகவில்லை என்பதைக் கேட்டு நாமும் மகிழ்வு கொண்டோம். இருந்த போதும், இடம் பெயர்ந்து வந்த மக்கள் யாவருமே எகெட் கரித்தாஸ் நிறுவனத்தை வாய்க்கு வாய் வாழ்த்தியதை நாமும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

தற்போதைய காலகட்டத்தில் மாத்திரமல்லாமல் அன்று தொடக்கம் இன்று வரை எமக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பக்கபலமாய் இருப்பது நமது அந்தோனியார் ஆலயமும், பங்குத் தந்தையர்களும், அருட் சகோதரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களும், எகெட் நிறுவனமும் தான் என்று வாய் நிறைய இவர்கள் சொல்லும் போது கத்தோலிக்க திருச்சபை மக்களோடு மக்களாக, மக்களுக்காக எப்பொழுதும் செயற்படுகின்றது என்பதை நாமும் ஏற்றுக்கொண்டு உள்ளூர மகிழ்ந்து கொண்டோம்.

இருப்பினும், அகதி வாழ்க்கை என்னும் போது சொந்த அகம் அற்ற நிலையைத்தானே எண்ணிப்பார்க்க வேண்டி இருக்கின்றது. ஏனென்றால் அதிக பட்சமான அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போதும் பூரணப்படுத்தப் படாத திருப்திகரமற்ற நிலைகள் இல்லாமல் இல்லை. இவ் விடயத்தை யொட்டி யாரையும் யாரும் குறை கூற முடியாதிருப்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

"காலம் செய்த கோலம்" என்பதற்கொப்ப தமிழ்மக்களுக்கு வந்திருப்பது சாபக்கேடா மரணக் கேடா அல்லது இதுதான் தலை எழுத்தா என்ற விரக்தி நிலையில் தான் உள்ளோம். ஏனெனில் இவர்கள் புலம்பும் போது முஸ்லிம்களுக்கு ஒன்றென்றால், சிங்களவர்களுக்கு ஒன்றென்றால் எத்தனை மினிஸ்டர்மார் பதறி அடித்துக் கொண்டு வருகின்றார்கள், உயர்தர அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வந்து உடன் உதவி செய்கின்றார்கள். ஏன் அனைத்து ஊடகங்களும் கூட வந்து மொய்த்து சிறிய விடயத்தையும் பெரிது படுத்தி விடுகின்றார்கள். பாழாய்ப் போன மனிதர்கள் நாங்களும் இருக்கின்றோமே, எங்களை எந்தத் தமிழ் எம்பி வந்து பார்த்தார்? ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் வந்து நம்மைச் சந்திக்கவில்லையே என்று விசனம் தெரிவிக்கின்றார்கள்.

செல்வச் செழிப்போடு, தனிமனித கௌரவத்தோடு வாழ்ந்து வந்த இவர்கள் தொடர்ந்தும் இந்த அகதி அந்தஸ்தைப் பெற்று வாழ விரும்பவில்லை. சொந்த இடங்களுக்குச் சென்று சுதந்திரமாக நடமாடி சுயகௌரவத்தோடு தலை நிமிரவே விரும்புகின்றார்கள்.


தன்மானமுள்ள ஒரு சாதரண தமிழனுக்கே உரித்தான சிந்தனைகள், விருப்பங்கள், எண்ணங்கள், ஏன் வீராப்பு அனைத்தும் இருந்தாலும் கூட பல விதமான சந்தேகக்குறிகள் இவர் களை வாட்டி வதைப்பதையும் எம்மால் அறியமுடிந்தது.

அதாவது:

- மீண்டும் போர் வெடிக்குமா?
- இராணுவம் தங்களை ஒரு பணயக் கைதியைப் போல் பயன் படுத்தி பேரம் பேசுமா?
- புலிகள் செய்யும் ஒவ்வொரு செயலும் தங்கள் மேல் எதிர்த் தாக்கங்களை ஏற்படுத்துமா?
- முஸ்லிம்களை எவ்வளவு தூரத் திற்கு நம்புவது?
- இளம்பராயத்துப் பிள்ளைகளுக்கு என்ன நடக்குமோ? பழிக்குப்பழி வாங்குவார்களா?
- போக்குவரத்து சீராக இடம்பெறுமா? அல்லது இன்று யாழ்ப்பாணத்து மக்களுக்கும், வாகரை மக்களுக் கும் ஏற்பட்டுள்ள நிலைதான் ஆகுமா?

போன்றவையே இவர் களை வாட்டி வதைக்கும் கேள்விக் கணைகளாகும். இருப்பினும் வரப் போகும் கிறிஸ்து பிறப்பு விழாவினையும், புத்தாண்டையும் அங்கே கொண்டாட விரும்புகின்றீர்களா என்று அளவளாவிய போது ஒரு தீர்க்கமான முடிவினையோ கருத்தினையோ அவர்களால் முன் வைக்க முடியவில்லை. ஆகவே இதன் அடிப்படையில் இவர்கள் அனுபவித்த அந்தப் பயங்கரமான இடப்பெயர்வு அனுபவம் இன்னும் இவர்களைக் கதிகலங்க வைத்துக் கொண்டிருகிறது என்பதை உணர முடிந்தது. இருந்தபோதும் நமது உரையாடலின் பின் இவர்கள் வழங்கிய விருந்தோம்பலும், தோழமைத்துவ உரையாடலின் பண்பாடும் மூதூர் மண்ணின் வாசனையை அந்த முகாம்களிலேயே முகர முடிந்தது. சுபீட்சமான எதிர்காலம் இவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் மலர தொண்டன் வாழ்த்துகிறான்.

**— அருட்தந்தை. றொஹான்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தொண்டனின் சில நிமிடங்கள் பகுதிக்காக இம்முறை பிரபல சத்திர சிகிச்சை நிபுணர், வைத்தியர் ஜோசப் தங்கராஜா சேவியர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தோம். மிகவும் அன்புடன் எம்மை வரவேற்ற அவர், மிகவும் பொறுமையாக அதேவேளையில் இனிமையாக எமது கேள்விகளுக்குப் பதிலளித்தார். ஒரு வைத்தியராக மட்டுமே அவரைப் பலருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் அவருக்குப் பலபரிமாணங்கள் உண்டு. கல்வியலாளர் தமிழ்மொழி ஆராய்ச்சியாளர், எழுத்தாளர், ஆங்கில விற்பனர், அகிம்சாவழிச் சிந்தனைப் போராட்ட வீரர் இப்படி பல வடிவங்களை அவர் எடுத்துள்ளார். அவரின் இவ்வாறான திறமைகளை, ஆற்றல்களை இந்தச் செவ்வியானது வெளிக்கொணரும் என்று நம்புகின்றோம்.

**நீங்கள் ஒரு பிரபலமான வைத்தியர் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் நீங்கள் பெரும் தமிழ் ஆர்வலர் என்பது பலருக்கும் தெரியாது. உங்களுக்கு எவ்வாறு தமிழ் ஆர்வம், மொழியியல் ஆர்வம் ஏற்பட்டது?**

சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளார், வண பிதா. தனிநாயகம் அடிகளார், வண பிதா. தாவீது அடிகளார் ஆகியோரின் தமிழ்ப் பணிகள் என்னை மிகவும் கவர்ந்தன. எனவே எனக்கு மொழியியல் மேல் பேரார்வம் ஏற்பட்டது. இதனால் தமிழ் மொழியாரச்சிகளில் ஈடுபட்டேன்.

**இது தொடர்பாக ஏதேனும் நூல்களை எழுதியுள்ளீர்களா?**

ஆம் எழுதியுள்ளேன் The land of letters எனும் தலைப்பிலேயே அப்புத்தகத்தை வெளியிட்டேன். இது எழுத்தாராய்ச்சி தொடர்பான புத்தகமாகும்.

**இப் புத்தகத்தில் எது தொடர்பாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்?**

சிலர் குறிப்பிடுவது போல் கிரேக்கர், உரோமர் போன்றவர்கள் ஒலி எழுத்துக்களைக் கண்டுபிடிக்கவில்லை. ஆதித் திராவிடர்களே ஒலி எழுத்துக்களை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்கள். அது வியாபாரம் செய்ய வந்த வர்த்தகர்கள் மூலம் யூதர்கள், கிரேக்கர்கள், உரோமர்கள் ஊடாகத்தான் மேற்குலகம் வரை பரவின. பேச்சொலியன்கள், சப்த அஸ்திபாரம் என்ற அடிப்படையில் உள்ளன. இது அரிச்சுவடி என்றும் சொல்லப்படும். அரி என்பது எழுத்து என்பதையும் சுவடி என்பது சப்த அத்திபாரத்தையும் குறிப்பிடும்; களிமண் தட்டுகளில் இவை எழுதப்பட்டதாக அறியப்படுகின்றது. ஆரம்பத்தில் 5 ஒலியன்கள் மாத்திரமே இருந்தன. அ, இ, உ, எ, ஒ என்பனவே அவை. ஆங்கிலத்தில் பாருங்கள். a, e, i, o, u தமிழ் ஒலியன்களைப் பின் பற்றியே ஆங்கில ஒலியன்கள் காணப்படுகின்றன.

**நீங்கள் தமிழாராய்ச்சி மாநாடுகளில் பங்கு பற்றியுள்ளீர்களா?**

(இலேசாக சிரிக்கின்றார்). 1981 என்று நினைக்கின்றேன். மதுரையில் நடைபெற்ற 5வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் எனது கட்டுரையொன்றை வாசித்தேன். தலைமையுரைக்கு அடுத்ததாக என்னை மேடைக்கு அழைத்தனர். ‘இந்து மதத்தின் மூலமொழி சமஸ்கிருதம் அல்ல தொல்திராவிடம்’ என்ற தலைப்பில் கட்டுரையைச் சமர்ப்பித்தேன். அது பலத்த வரவேற்பைப் பெற்றது. இந்துமத ஆதிமொழி எலு மொழி, அது ஈழமொழி என்றும் குறிப்பிடப்படும். உண்மையில் ஈழவர்தான் தொல்திராவிடர்.

**நீங்கள் அகிம்சாவழிச் சிந்தனைப் போராட்ட வீரர் என்று குறிப்பிடப்படுகின்றீர்களே, அது பற்றி சற்றுக் கூறுவீர்களா...?**

இலங்கையின் இனப்பிரச்சனைக்கும், இன வன்முறைக்கும், கடந்த ஆண்டு (2006) பொன் விழா ஆண்டு. 1956ம் ஆண்டு இலங்கையில் இன முரண்பாடு தோன்றியது. அக்காலத்தில் விழாக்கள் என்றால் சீனவெடி வெடிக்கும். ஆனால் இன்றோ குண்டுகள் தான் வெடிக்கின்றன. பண்டாரநாயக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத, மொழி, வர்க்க பேதத்தை உண்டாக்கிவிட்டார். இவை என்னை மிகவும் பாதித்தது.

**இது தொடர்பான உங்கள் நடவடிக்கைகள் பற்றிக் கூறுவீர்களா?**

பல நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். உதாரணமாக 1983ம் ஆண்டின் இனக்கலவரம் தொடர்பாக சன்சோனிக் கொமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அவ்விசாரணையில் திருகோணமலையில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக பொய்யான பல சாட்சியங்கள் வழங்கப்பட்டிருந்தன. அச் சாட்சியங்கள் பொய்யானவை என்று எனது சாட்சியத்தின் மூலம் நிரூபித்தேன். என்னைப் பொறுத்த மட்டில் தொண்ணூறு விழுக்காடான சிங்களவர்கள் மிகவும் நல்லவர்கள். கல்வியானது ஆங்கில மொழி மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டிருந்தால் இலங்கையின் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என் அபிப்பிராயம்.

**இது தொடர்பான வேறு என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?**

சமாதானத்திற்கான யுத்தம் என்ற ஒன்று இடம்பெற்றது, சமாதானம் வரவில்லை. பேச்சுவார்த்தை மூலமான சமாதானம் என்ற சிந்தனை தற்போது நடைமுறையில் உள்ளது, அதுவும் வெற்றி பெறவில்லை. சமாதானம் இலங்கையில் மலரவேண்டும் எனில் அது கல்வியினால் மட்டுமே சாத்தியம். மொழியறிவு இதற்கு முக்கியம். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளை இலகுவாகப் படிக்கவும், போதிக்கவும் கூடிய வகையில் 'ஈழத்து மும்மொழி அரிச்சுவடி' என்னும் நூலினை வெளியிட்டேன். (இவ் வேளையில் இரண்டு புத்தகங்களை – அவர் எழுதியது – எமக்குக் காட்டப்படுகின்றன. Revision of the English Alphabet - (National Integration in multi - ethnic nations through the use of a link script) என்ற 1988இல் வெளியிடப்பட்ட புத்தகம், மற்றையது. 'The multi lingual Alphabet' and its use in Teaching English through the home language of beginner learners' என்ற நூலும் ஆகும். இவற்றைப் பார்க்கும்போது அவரின் ஆற்றலையிட்டு நாம் வியக்கின்றோம். முதலாவது புத்தகத்தை தன் தாயாருக்கும், இரண்டாவது புத்தகத்தை அருட்.பணி தமிழ்த்தூது தனிநாயக அடிகளாருக்கும் சமர்ப்பணம் செய்து இருந்தார்.

**உங்களது இம்முயற்சி அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?**

ஆம்! தற்போது கிழக்குப்பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவர்கட்கு சமாதான மருத்துவம் (Peace medicine) என்னும் பாடம் உள்ளது. இதில் இவ் வரிச்சுவடி முறைகள் கற்பிக்கப்படுகின்றன. இதற்கான Module Leader ஆக நான் பணிபுரிகின்றேன். இப் பாடநெறியை பல்கலைக்கழக செனற் அங்கீகரித்துள்ளது.

**இவ்வேளையில் இன்னொரு கேள்வியைக் கேட்பதும் பொருத்தமானதாக இருக்கும் என நம்புகின்றோம். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையை ஆரம்பிக்க நீங்கள் மறைமுகமாகப் போராடி உள்ளீர்கள் என்று அறிகின்றோம். அது பற்றிக் கொஞ்சம் கூற முடியுமா?**

(உள்ளே எழுந்து சென்று 'பிரிவ்கேஸ்' ஒன்றைக் கொண்டு வந்து திறந்து, அதில் இருந்து ஐந்து கோவைகளை எடுத்து மேசையில் வைக்கின்றார்). இவ்வளவு கோவைகளும் மருத்துவ பீடமொன்றை ஆரம்பிப்பதற்காக என்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். 1988ல் பாரளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட சட்டமொன்றின்படி வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆளுனர் சபையில் நானுமோர் உறுப்பினர். அதே நேரம் வட கொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரியொன்றும் றாகமையில் இயங்கியது. எனினும் இடதுசாரிகள் சிலரின் எதிர்ப்பால் இக்கல்லூரிகளை மூட வேண்டியேற்பட்டது. ஆனால் வடகொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரியில் இருந்த மாணவர்களின் நலன் கருதி களனிப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைக்கப்பட்டது. ஆனால் யாழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இது தொடர்பாக அப்போதைய அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டபோது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடமொன்றை அமைத்து வட இலங்கை தனியார் மருத்துவ பீட மாணவர்களை அதில் இணைப்பது என்ற உறுதி மொழி தரப்பட்டது. அப்போதுதான் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீடம் பற்றிய எண்ணக்கரு உண்டானது. அதன்பின் காலத்திற்குக் காலம் ஜனாதிபதிகள், கல்வி அமைச்சர்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு போன்றோருடன் தொடர்பு கொண்டு பலவகையிலும் போராடிய பின்புதான் இப்போது கனிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நாட்கள் கடந்தமைக்குக் காரணம் என்ன?

நாம் சிறுபான்மையினர் என்பதுதான் காரணம். இப்போதும் கூட இழுத்தடிப்புக்கள்தான் நடைபெறுகின்றன. ஆனால் நாங்கள் மொடியூல்களாக பாடங்களைப் பிரித்து விரிவுரையாளர்களைக் கொண்டு போதிக்கின்றோம். தேவையானபோது விரிவுரையாளர்களை நாடியும் செல்வோம். எனவே விரிவுரையாளர் பற்றாக் குறை இருக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

**இவ்வளவு நேரமும் பொறுமையாக இருந்து எமது கேள்விகட்கு விடையளித்த வைத்திய நிபுணர். ஜே.ரி. சேவியர் அவர்கட்கு நன்றி கூறி விடைபெற்றோம். வெளியே மழை பெரிய அளவில் பொழிந்து கொண்டிருந்தது.**

**– ஆழியோன்**

# குடும்ப வாழ்வுக்கு முக்கியத்துவம்



நேர்மை, குடும்ப பாசம், குடும்பத்தில் பிரமாணிக்கம், கட்டுப்பாடு ஆகியவை சமூகத்தின் நிலையான தன்மையையும், வளமையையும் கட்டிக் காப்பதால் அப் பண்புகள் பற்றி உங்கள் மறை உரையில் அழுத்தம் கொடுங்கள் என்று சாம்பியா நாட்டு ஆயர்களுக்கு திருத்தந்தை அறிவுரை கூறினார்.

அதேவேளை, வத்திக்கான் போர்க் கருவிகளை ஆதரிப்பதில்லை, போர்க் கருவிகளை உற்பத்தி செய்தல், அவைகளைப் பரிசோதித்துப் பார்த்தல், இறக்குமதி ஏற்றுமதி செய்தல் போன்றவை அகில உலக சபை கட்டுப்பாட்டில் வைக்கப் பட வேண்டும் என்று வத்திக்கான் தெரிவித்துள்ளது.



# மதத்தின் சக்தி



உலக மயமாக்கலுக்கிடையில் மதம் மட்டுமே மக்கள் மத்தியில் அமைதியையும், புரிதலையும் உருவாக்கக்கூடிய ஆற்றல் மிக்க சக்தி என்று வத்திக்கான் கருத்துத் தெரிவித்துள்ளது.

வத்திக்கான் வந்த ஐ.நா.குழுவிடம் ஒக்டோபர் 27ம் திகதி உரையாற்றிய நேசநாடுகளுக்கான வத்திக்கானின் கண்காணிப்பாளர் பேராயர் செலஸ்டினோ மிக்லியோரே இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் மனித உரிமை, மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை ஆழமாக உணர்ந்து அனுபவிக்க, புதியவழிகள் முன்வைக்கப்பட்டன.

பேராயரின் கருத்துப்படி மதங்கள் போன்று பசிக்கின்றவர்களுக்கு உணவூட்டி உடையற்றவர்களை உடுத்தி, நோயாளிகளைக் குணப்படுத்தி, கைதிகளைச் சந்தித்துப் பணிபுரியும் தன்மையை யாரும் மேற்கொள்ள முடியாது. எனவே, மதம் எல்லா மக்களுக்கும் நன்மை புரியவும், ஒற்றுமையை உருவாக்கவும் சமாதானம் ஏற்படுத்தவும் சக்தி பெற்றுள்ளது என்று உறுதியாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




R. ஸ்ரான்லி பிரபாகரன்

## புரொய்டின் சிந்தனையில் இன்றைய குழந்தைகள்

(சிக்மன்ட் புரொய்ட் என்னும் உளவியல் அறிஞர்-படைப்பாக்கம், சிறுவர்கள், என்னும் மூன்று அம்சங்களையும் சமகோட்டுத் தளத்தில் வைத்து இந்த இதழின் மனக்கோலக் கட்டுரையை கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறை விரிவுரையாளர் ஜீவரெத்தினம் கென்னடி அவர்கள் எழுதியுள்ளார்.

உளவியல் அறிஞர்களின் கருத்துக் களை நமது அன்றாட வாழ்வில் பிரயோகித்துப் பார்த்துப் பழகிக் கொள்ளவேண்டும். இக்கட்டு ரையில் சிறுவர்களின் படைப்பாக்கம், கற்பனை என்பன புரொய்டின் கருத்தின் பின்னணியில் நோக்கப்படுகின்றது.

மனித நடத்தைகளுள் கற்பனை தொடர்பானவையும் முக்கியமானதாகும். நாம் மனிதனை முழுமனிதனாகப் பார்க்க முயற்சிக்க வேண்டும். வாழ்வியலின் புறத் தோற்றங்களை மாத்திரம் முதன்மைப்படுத்தி அபிவிருத்தியை நோக்கிச் செல்ல முனைந்ததன் விளைவாகவோ என்னவோ, உலகே இன்று அழிவின் அச்சுறுத்த லுக்குள்ளாகி இருக்கின்றது. ஆதலால், எதிர் கால உலகை வடிவமைக்கவிருக்கின்ற சிறுவர் களின் உளச் செயற்பாட்டை முதன்மைப்படுத்தும் இக்கட்டுரை சமுதாய வளர்ச்சியில் அக்கறை உடைய அனைவருக்கும் முக்கியமானதாகும்.)

நவீன உலகின் முன்னோடிகளாக நால்வரைக் குறிப்பிடலாம். புதிய பொருளாதாரச் சிந்தனைக்கு வழிவகுத்த கார்ல் மாக்ஸ் (1818 - 1883), பரிணாமக் கொள்கைக்கு வித்திட்ட சார்ள்ஸ் டார்வின் (1809 - 1882), புதிய விஞ்ஞானத்தின் கர்த்தா அல்பர்ட் ஐன்ஸ்டின் (1879 - 1955), அத்துடன் புதிய உளவியல் சிந்தனைக்கு அடிகோலிய சிக்மண்ட் புரொய்ட் (1856 - 1939) ஆகிய நால்வருமே நவீன உலகின் சிற்பிகள் ஆவர். இவர்களுள் முதற்கூறிய மூவரும் வெளி உலகச் சிந்தனைகளான பொருளாதாரம், கூர்ப்பு, விஞ்ஞா னம் ஆகிய மூன்று பகுதிகளைக் கையாண்டனர். ஆனால், புரொய்டோ உள்மனம் சம்பந்தப்பட்ட உளவியல் உலகின் அடிப்படைத் தத்துவத்தினை ஆதாரமாகக் கொண்ட ஒரு சிந்தனையை முன் வைத்தார்.

சிக்மண்ட் புரொய்ட் பற்றிய பலவகையான கருத்துகள், ஆக்கங்கள், விமர்சனங்கள் என்பன வெளிவந்துள்ளன. எந்தவொரு உளவியல் ஆக்க மாக இருந்தாலும் அதில் புரொய்ட் பற்றிய ஒரு சிறு குறிப்புக்கூட இல்லாது வெளிவராது எனும் நிலையே இன்றைய உண்மையாகும். இக்கட்டுரையானது புரொய்டின் "கற்பனை எழுத்தாளரும் பகற்கனவும்" (Creative Writer an Day Dreaming – 1908) எனும் ஒரு கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு இன்றைய உலகின் சிறு குழந்தைகளைப் பற்றிய சமூக, சமய, கலாசார, அரசியல் நோக்கில் எழுதப் படுகின்றது.

புரொய்ட் தனது கட்டுரையில் பகற்கனவு பற்றிக் குறிப்பிடுகையில், அதை இரண்டு வகையாகப் பிரிக்கின்றார். கிளர்ச்சிக் கனவுகள் (Erotic) என்றும், இலட்சியக் கனவுகள் (Ambitious) என்றும் இரு வகைப்பட்ட கனவுகளாகப் பிரிப்பவர், அவற்றினை ஓர் எழுத்தாளன் எவ்வாறு படைப்பாக்கத்துக்குக் கையாளுகின்றான் என்பதையும் விளக்குகின்றார். அதாவது, ஒரு படைப்பாளி தனது கதாபாத்திரங் களைப் படைப்பதற்கு முன்பாகத் தனது கற்பனை யில் மூழ்க வேண்டும். படைப்பிற்கு முதற்படியும், முக்கியபடியும் அதுவாகும். அவன் ஒரு கற்பனை உலகில் (Fantastic world) வாழ வேண்டும். அவ்வாறு கற்பனையில் வாழும் போது அவனது கற்பனைகள் கிளர்ச்சியாக (erotic) அல்லது இலட்சியமாக (ambitious) மட்டுமே இருக்கும். இது ஒரு படைப்பாளிக்கு மட்டுமே உரித்தான பண்பல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்குமே பொதுவான ஒரு பண்பாகவே கருதப்படுகின்றது.

இவ்வாறு கற்பனை உலகில் வாழும் ஒரு படைப்பாளி (அல்லது நாமனைவரும்) முதலில்தான் வாழும் உண்மையான உலகினை மறக்கின்றான். அவனது உண்மையான பௌதீக உலகில் (real Physical world) இருந்து விடைபெற்று சிறிது சிறிதாகத் தனது சுய நினைவை இழந்து தான் படைக்கப் போகின்ற கற்பனை உலகினுள் (fantastic world) நுழைகின்றான். அக்கற்பனை உலகென்பது அவனுட்பட அனைவரும், கற்பனை உலகின் உண்மை மனிதர்களும் சம்பவங்களுமே ஆகும். அக்கற்பனை உலகில் அவன்தான் முதன்மையானவனாகி, பின்னர் கதாநாயகனாகின்றான். அங்கு நடக்கும் அனைத்து நிகழ்விலும் அவனே முக்கியமாகி, சம்பவங்களைத் தன் மூலமாகவே நிகழ்த்துகின்றான். அங்கு அவன் குழந்தையாக, இளைஞனாக, வேலையாளனாக, முதலாளியாக, ஆசிரியனாக, மாணவனாக நாட்டின் முதற் குடிமகனாக, சாதாரண குடிமகனாக, ஓட்டுனராக, நடத்துனராக, பயணியாக, ஏன் இன்றைய ராணுவ வீரனாக, போராளியாக என சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுகின்றான். அந்தச் சூழ்நிலையில் ஒரு கதாபாத்திரமாக மாறும் அவன் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் கூட அக்கற்பனை உலகின் பாத்திரங்களாக மாற்றிவிடுகின்றான். தவறிக்கூட அவன் அவ் உலகில் ஏனையோரை - தனக்கு எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும் கூட - உள் நுழைய அனுமதிப்பதில்லை. இக்கற்பனை உலகில் வாழும் போதுதான் ஓர் எழுத்தாளன் தனது படைப்பினை உருவாக்குகின்றான்.

இதே முறையினையே குழந்தைகளும் கையாளுகின்றன என்பதை புரொய்ட் விளக்குகின்றார். நாம் சிறுகுழந்தைகளின் விளையாட்டுக்களை மறைந்து கவனித்தோமாயின், அவர்கள்கூட இவ்வகையான கற்பனை உலகில் வாழும் நிலைக்கு மாறுவதை அவதானிக்கலாம். அவ்வாறு அவர்கள் மாறும் போது பெரியவர்களை அவர்கள் அக்கற்பனை உலகினுள் அனுமதிப்பதில்லை. அதாவது, பெரியவர்களைக் கூட அவர்கள் குழந்தைகளாகத்தான் அவ்வுலகினில் அனுமதிக்கின்றனர். அவர்கள் அக்கற்பனை உலகில் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், பிள்ளைகள், இராணுவத்தினர், போராளிகள் அனைவரையுமே தங்களது வயது, ஆளுமை, மனோபாவம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே உருவாக்குகின்றனர். அதாவது, ஒரு குழந்தையின் கற்பனை உலகானது அக்குழந்தையின் நியம/ நிலையிலேயே (Standard / Stage) உருவாக்கம் பெறுகின்றது. புரொய்டின் வாதப்படி, படைப்பாளியான எழுத்தாளனும், விளையாட்டில் ஈடுபடும் குழந்தையும் ஒரு நிலையில் (Same stage) தான் உள்ளனர். இருவரும் வாழ்வது ஒரே வகையான உலகினில்தான். ஆனால், படைப்பாளியோ சிறிது நேரத்தின் பின்னர் தனது கற்பனை உலகிலிருந்து விடுபட்டு உண்மை உலகிற்கு (real world) வந்து தனது கற்பனையை உண்மையுடன் கலந்து எழுத்தாக்கி ஒரு படைப்பினை உருவாக்குகின்றான். ஆனால், குழந்தைகளோ படைப்பாளியினின்று வேறுபட்டு, அக்கற்பனை உலகிலேயே தொடர்ந்தும் வாழும் ஆற்றல் படைத்தவர்களாக விளங்குகின்றனர்.

இன்றைய உலகில் குழந்தைகளின் கற்பனை உலகானது உண்மை உலகின் அடிப்படை நியமங்களின் சாராம்சத்தினையே கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். ஒரு குழந்தையின் விளையாட்டினை நிர்ணயிப்பதில் அதன் சூழ் நிலை (Surrounding) மிகவும் பாரிய பங்கினை வகிக்கின்றது. அதாவது, அக்குழந்தையின் கற்பனை உலகானது இன்றைய சூழ்நிலையில் மிகவும் தூய்மையற்றும் (Polute) நேர்மையற்றும் (Corrupt) காணப்படுவது கண்கூடு.

சமூக நிலைமையினை எடுத்துக் கொண்டால், அக்குழந்தையானது, தனது சமூகம் எவ்வாறு உள்ளதோ அதேபோல் தானும் சித்தரித்து அதனை மையமாகக் கொண்டு அதன்படி தனது விளையாட்டினை ஆரம்பிக்கின்றது. எடுத்துக்காட்டாக, இன்றைய குழந்தைகளின் விளையாட்டில் நமது இலத்திரனியல் தகவல் ஊடகமான தொலைக்காட்சி நாடகங்களின் தாக்கம் மிகவும் அதிகமாகவே உள்ளது. அக்குழந்தையின் கற்பனை உலகில் அடங்காத மருமகன் அல்லது மருமகள், மாமியார் அல்லது மாமனார் ஒரு முக்கியமான பாத்திரமாக இருப்பதை நாம் உற்று அவதானித்தால் காணக் கூடியதாக இருக்கும். ஆனால், அதில் சோகம் என்னவென்றால் அக்குழந்தையே அப்பாத்திரமாக மாறுகின்றது. இவ்வாறு அக்கற்பனை உலகினில் மாறும் குழந்தை அந்தப் பண்பு நிலையிலேயே தொடர்ந்தும் வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது. அந்நிலைக்குத் தள்ளப்படும் அக்குழந்தையின் மனோ நிலையானது இறுக்கமடைந்து அதுவே பின்னர் அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு அத்திவாரமாகின்றது. அவ் அத்தி வாரத்தில் கட்டப்படும் கட்டடத்தின் நிலையினை நாம் கற்பனை பண்ணக்கூட முடியாதுள்ளது என்பது இன்றைய உண்மை உலகின் ஒரு சோகமான நிகழ்வாகும். அதாவது அக்குழந் தையின் எதிர்காலம் (மனோரீதியான) மிகவும் சிக்கலுக்கு உட்பட்டதாகவே காணப்படும். தொழில் ரீதியாகவோ, கல்வி ரீதியாகவோ அக் குழந்தையின் எதிர்காலமானது பிரகாசமாக இருப்பினும், மனோ ரீதியாகச் சிதைவடைந்த, தூய்மையற்ற, நேர்மை யற்ற ஒன்றாகவே காணப்படும். எடுத்துக் காட்டாக, அக்குழந்தை ஒரு வைத்தியனாக அல்லது ஆசிரியனாக வருமிடத்து, அதனிடம் வரும் நோயாளி அல்லது மாணாக்கரை அது கையாளும் விதமானது மிகவும் குரூரமாகவும் (Crude) விரும்பத்தகாத வகையிலும் (unacceptable) இருப்பதற்கான சாத் தியக்கூறுகள் அதிகம். இன்றுள்ள குழந்தைகளின் கற்பனை உலகில் ஆசிரியர்களாக அவர்கள் மாறும் போது, அவர்கள் தமது உண்மையான பாடசாலை ஆசிரியர்களைத் தமது ஆதாரமாகக் (role model) கொண்டாலும் அதன் குணாதிசயத்தில், அது மிகவும் கண்டிப்பான, வசை மொழி பாவிக்கக் கூடிய தன்மையினைக் (quality) கொண்டிருப்பதைக் காணலாம்.

சமய நோக்கில் இன்றைய குழந்தையின் உலகமானது, ஒரு விளக்கமற்ற பக்தியுள்ள உலக மாக உள்ளதை நாம் வேதனையோடு பார்க்கக் கூடியதாகவே உள்ளது. இன்றைய உலகில் எக் கருத்தினை நாம் கூறுவதானாலும், அதற்குரிய விளக்கத்தினை நேரடியாகவே உதாரணங்களுடன் குழந்தைகள் கேட்பதை அவதானிக்கலாம். இன்றைய விஞ்ஞான, தகவல், தொழில்நுட்பம் அதற்கான வழியினை அழகாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இருபது முப்பது வருடங்களுக்கு முன்னர் எந்தச் சமயமானாலும் அதன் கருத்துக் களை குழந்தைகள் விமர்சனம் செய்யாது ஏற்றுக் கொண்டன அல்லது ஏற்றுக்கொள்ளச் செய்யப் பட்டன. அக்கட்டத்தில் கூட குழந்தைகளின் மனோ நிலையானது எவ்விதமான தூய்மையின்மைக்கும் ஆட்படாது காணப்பட்டது. அதனால், அன்றைய குழந்தைகள் அச் சமயக் கருத்துக்களை எவ்வித மான கேள்வியுமற்று ஏற்றுக் கொண்டன; அதன்படி வாழப் பழகிக் கொண்டன. ஆகவே அன்று அதன் கற்பனையுலக விளையாட்டானது மாசுபடாது களங்கமற்றே காணப்பட்டன. அதன் மதபோதகர் கூட ஒரு களங்கமற்ற, கலப்படமில்லாத நேர்மையான மனிதராகவே காணப்பட்டார். ஆனால் இன்றைய உண்மை உலகின் நிகழ்வுகள், அக்குழந்தையின் மனோநிலையில் மாற்றத்தினை உண்டு பண்ணி அதன்படியே வாழவும் கற்றுக்கொள்கின்றன.

அரசியல் ரீதியான கண்ணோட்டத்தில், இன்றைய குழந்தைகள் மிகவும் ஒழுக்கமற்ற, அநாகரீக அரசியல் விளையாட்டையே விளையாடு கின்றன. அதன் கற்பனை உலகில் ஆயுத நடை முறைகளே வகிபாகமாக மாறிப்போயுள்ளன என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. இதில் யார் நல்லவர், எது நல்லது எனும் விளக்கப்பாட்டிற்குள் நாம் நுழைந்தால், அங்கு அக்குழந்தையின் கற்பனை உலகில் எதுவுமே நல்லதாக, எவருமே நல்லவராக இருக்க வாய்ப்பு மிகவும் குறை வானதாகவே காணப்படும். அங்கு "ஏ.கே 47" உம், கண்ணி வெடியும் தான் முக்கிய விளையாட்டுச் சாத னங்களாகக் காணப்படும். இலங்கையில் மட்டும் தான் இன்னிலை என்று எண்ணக்கூடது. வெளிநாட் டுச் செய்திகளில் பாடசாலைச் சிறுவர்களின் துப்பாக் கிப் பிரயோகம், கொலை, பாலியல் விவகாரம் என்பன உணர்த்துவது இவற்றைத்தான்.

எனவே, இன்றைய உலகின் குழந்தை களை புரொய்டின் கண்ணோட்டத்தோடு பார்ப்போ மாகில், குழந்தைகளின் குழந்தைத் தன்மை (Childness) சிறிது சிறிதாக மறைந்து குரூரத் தன்மை (Crudeness) அதிகரிப்பதைக் காணலாம். குழந்தைகளின் விளையாட்டில், அதன் கற்பனை உலகில் இக் குரூரம் ஆரம்பித்து, பின்னாளில் உண்மை உலகிற்கு அவற்றை எடுத்துச் சென்று அதன் விதிப்படி (Rules) வாழ்ந்து, ஒரு நேர்மையற்ற, தூய்மையற்ற உலகினைப் படைத்து அதன்படி வாழத் துவங்கும்.


எனவே, பெரியோரே, பெற்றோரே, "முளையிலேயே கிள்ளுவோம்".

**–ஜீவரெத்தினம் கென்னடி –**
மொழித்துறை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்



## (Meditation)

தியானத்தினை யோகாசன முறைப்படி செய்வதற்குப் பத்மாசனம், வஜ்ராசனம், சித்தாசனம், வீராசனம் போன்றவற்றில் யாதாயினும் ஒன்று பொருத்தமானது. இவ் ஆசனங்களை போட முடியாதவர்கள். சுகாசனத்தில் இருந்து கொண்டே செய்யலாம். எவ்வாறாயினும் தியானம் செய்வதற்கு முதுகு எலும்பை நேராக வைத்திருப்பது மிக அவசியமானது. கண்களை மெதுவாக மூடி கைவிரல்களில் சுட்டு விரலை (In don) முடித்து பெருவிரலின் நடுக்கோட்டுடன் பிடித்து "சின்முத்திரை" பிடித்துக்கொள்ளவேண்டும். மணக்கண்னை மெதுவாகத் திருப்பி மூக்கு நுனிக்குக் கொண்டு வந்து மூக்கு நுனியூடாக உட்சென்று வெளிவருகின்ற சுவாசத்தை அவதானிக்க வேண்டும். இயற்கையாக நடைபெறுகின்ற சுவாசத்தை ஒருமுகப்பட்ட மனத்தோடு அவதானிக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது மனம் அலைக்கழிந்து வேறு எங்காவது செல்லலாம், அவ்வாறான சந்தர்ப்பங்களில் மனதைப் படிப்படியாக திருப்பி, மீண்டும் மூக்கு நுனிக்குக் கொண்டு வருதல் வேண்டும். அவசரம் தேவையில்லை. நாம் உள்ளெடுக்கின்ற ஒட்சிசன் மூலக்கூறுகள் உடலில் உள்ள இரத்தத்தோடு கலந்து உடல் முழுவதும் பரவுவதை மனதால் அவதானிக்க வேண்டும். உடலில் உருவாக்கப்படுகின்ற அசுத்தக் கழிவுகள் பிரதானமாக கரியவமில வாயுவான காபனீரொட்சைட் ($Co_2$) மீண்டும் குருதியூடாக நுரையீரல்களிற்கு வந்து வெளியேறுவதை அவதானிக்க வேண்டும்.


அதாவது உட்சுவாசத்தில் நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், செயல்கள் என்பவற்றை எமது மனதிற்குள் புகுத்தி, எரிச்சல், பொறாமை, காய்மகாரம், தீய எண்ணங்கள் என்பவற்றை வெளிச்சுவாசத்தின் மூலம் வெளியகற்ற வேண்டும்.

எனவே தியானம் என்கின்ற இந்த உயரிய செயற்படு மனிதனை முழுமனிதனாக வையகத்துள் வாழ வழியமைக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயாத்துரையின் மனதில் பெரும் போராட்டம் கடல் அலைபோல் மோதி, மோதி எழுந்த வண்ணம் இருக்க, அன்ன மேரியின் வாழ்க்கையில் சுகமான தென்றல் அவளை உரசும் சந்தோஷம் எழுகின்றது. விடி வெள்ளி ஒன்று இவளுக்காகவே வானில் தோன்றியது போல் பிரகாசிக்கின்றாள்.

இயக்குனர்: என்னப்பா இது பெரிய முரண்பாடா இருக்கே?

**தொடர்கதை–04**

கதாசிரியர்: இது தான் சரியான (Point) பொயின்ற். அமைதியா கேளுங்க சேர்?

மார்கழித் திங்கள் 24ம் திகதி நடுநிசிநேரம். அன்னமேரி சுசந்த னையும், மல்காந்தியையும், துயில் எழுப்பி ஏதோ தன்னால் முடிந்த தைக் கொண்டு வாங்கிய புது உடுப்புக்களை பிள்ளைகளுக்கு அணிந்து விட்டு அவள் மாத்திரம் கல்யாணத்துக்கு முன் அவள் அப்பா வாங்கிக்கொடுத்த சாறியை உடுத்துக் கொண்டாள். ஏதும் நல்ல காரியம் என்றால், ஏதும் நல்லது நடக்க வேண்டும் என்றால் அவள் அச்சாறியையே உடுத்து வாள். அது தனக்கு ராசியான சாறி என்று சொல்லிக்கொள்வதுண்டு அத்தோடு இம்முறை ஐயாத் துரையும் அவளுக்கு புதுச்சாறி எடுத்துக் கொடுக்கவில்லை. ஆனால் பேமண்ட்ல விற்கும் லாம்பெண்ணச் சீத்தத் துணி மாத்திரம் வாங்கிக் கொடுத்தான். பிள்ளைகளுக்கும் அப்படியே.

ஆலயமணிகள் ஒலிக்க, பட்டாசு வெடிக்க "உன்னதங்க

# அழகின் அலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிலே இறைவனுக்கு மகிமை உண்டாவதாக" என்று பாட்டிசைக்கப்படும் வேளையில் தான் அன்னமேரி பிள்ளைகளோடு ஆலயத்துக்குள் நுழைந்தாள். நத்தார், புதுவருடம், ஈஸ்டர், ஆலயத்திருநாள் போன்ற விசேஷ தினங்களில் மாத்திரம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் அன்றும் நிறைந்து வழிந்ததால் கோவிலுக்குள் போதிய இடம் இருக்கவில்லை. இருப்பினும் அன்னமேரி பிள்ளைகளோடு உட்புகுந்து பீடத்துக் கிராதிக்கு முன்னே போய் அமர்ந்து கொண்டாள். பங்குச்சாமியார் சிங்களம் பாதி தமிழ் பாதி கலந்து பிரசங்க நேரத்தில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார். அன்னமேரி அதனைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள் . சின்னஞ்சிறுசுகளோ நிலத்தில் அயர்ந்து தூங்கி விட்டார்கள்.

நத்தார் திருப்பலி முடிந்ததும் அந்த ஊர் வழக்கப்படி மக்கள் கூடி நிற்பார்கள், பங்குச் சாமியாரும் வருவார். பின் ஒருவருக்கு ஒருவர் ஸ்தோத்திரம் தெரிவிப்பார்கள். அதாவது வாழ்த்துப் தெரிவிப்பார்கள். இப்படியாக ஒருவருக்கு ஒருவர் மகிழ் வோடு வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டிருக்கும்போது, காந்திமலரும், சுசந்தனும் அம்மா... அம்மா.. அதோ எங்கிட சங்கராபரணம் சேர் வந்திருக்கிறார் என்று சொல்லிக் கொண்டு அவரை நோக்கி ஓடிச்சென்று அவரது கரங்களைப்பற்றிக் கொண்டார்கள். அன்னமேரியும் அவர்கள் அருகே சென்று தனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டு காந்தியையும், சுசந்தனையும் பார்த்து சரி வாருங்கள், நேரமாகி விட்டது, ஆட்களோடு ஆட்களாய்ப் போய்ச் சேருவோம். வெளிச்சம் இல்லாத ரோட்டில தனியாப்போறது கஷ்டம் என்று சொல்லிக்கொண்டு அழைத்து வந்தாள்.

பூசை நேரத்தில் பெய்து ஓய்ந்த மழை மீண்டும் இலோசாகத் தூற ஆரம்பித்தது. அந்த மெல்லிய குளிர்காற்றில் இலேசான மழையுடனும் பிள்ளைகளின் கரம் பிடித்து நடந்து வந்த அன்ன மேரியின் மனதில்சிறிய உறுத்தல்ஏற்படுகிறது. எவ்வளவு அழகாக கணவன் மனைவி பிள்ளைகள் என்று ஒற்றுமையாக, குதூகலமாக, ஒரு குடும்பமாக பூசைக்கு எத்தனை குடும்பங்கள் வந்து போகின்றன. தனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை என்று



நீண்ட பெருமூச்சு விட்டாள், பிள்ளைகளின் தலையையும் தடவிவிட்டபடி.

அப்போதுதான் தன் பிள்ளைகள் தன்னை யும் விட்டு விட்டு ஓடிச்சென்று கரங்களைப் பற்றிக் கொண்ட மனிதரின் ஞாபகம் வந்தது. ஆமாம் அது சங்கராபரணம் என்று அழைக்கப்படும் செபஸ்தியாம் பிள்ளை வாத்தியார். சங்கீத ஆசிரியராகிய அவர் சங்காரபரணம் என்னும் இராகத்தை விருப்பத்தோடு ரசித்து ருசித்து அடிக்கடி பாடுவதால் அவருக்கு அந்தப் பட்டப்பெயரை வைத்துவிட்டார்கள்.

அப்படி என்ன விஷேசம் அந்த வாத்தியாரில இருக்கு, எதற்காக ஓடோடிச்சென்று என் பிள்ளைகள் அவர் கையைப் போய் பிடிக்க வேண்டும், அவரும் இவர்களை ஆரத்தழுவி வாழ்த்துத் தெரிவித்து உச்சிமுகர்ந்தாரே! என் பிள்ளைகள் தகப்பன் கையைக்கூட பிடிக்காதுகள், எட்ட நின்று தான் பேசுங்கள். பின்ன எப்படி அவருடன் இப்படி நெருக்கமானார்கள்! போதாக்குறைக்கு காலையிலே வீட்டுக்கு வரச்சொல்லி இருக்கிறார்களே!

இப்படியாக அவளது எண்ண அலைகள் சிறகு அடித்துப் பறந்து கொண்டிருந்தது. இந்த எண்ணங்களோடு வீடும் வந்துவிட்டது. அன்ன மேரியும் பிள்ளைகளும் வீட்டுக்குள் போனதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வேலையாக மல்லாந்து கிடக்கும் ஐயாத்துரையின் காலடிகளில் முழங்காலில் நின்று ஸ்தோத்திரம் சொன்னார்கள். காந்தி ,அப்பா அப்பா என்று அவன் கால்களை ஆட்டினாள். சீ... தள்ளு என்று உதறிவிட்டு ஐயாத்துரை மறுபக்கம் குப்பறப்படுத்தான். சுசந்தன் மாத்திரம் கவனித்தான், தாயின் கண்களில் இருந்து நீர்துளிகள் வழிந்து வருவதை.

காலையில் எழுந்ததும் மளமள என்று ஒவ்வொரு வேலையாக விரைவாகவே அன்னமேரி முடித்தாள். ஏனோ தெரியாது என்றும் இல்லாதவாறு அவள் ஆர்வத்தோடு செயற்பட்டாள். சுறுசுறுப்பாக இருந்தாள். வீட்டைப் பெருக்கி அழகுபடுத்துவதில் குறியாய் இருந்தாள். காலைச் சாப்பாடு வேலைகளை முடித்துவிட்டு மதிய உணவுக்காக இறைச்சி வாங்கி வரும்படி ஐயாத்துரையை அனுப்பினாள்.

காலை ஒரு 10.00மணி இருக்கும், பட்டாசு சுட்டு விளையாடிக் கொண்டிருந்த காந்தியும், சுசந்தனும் அம்மா என்று கூப்பிட்டபடி ஓடிவந்து கொண்டிருந்தார்கள். பிள்ளைகளின் அழைப்புக் குரலைக் கேட்டு குசினிக்குள் இருந்தவாறே தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள் அன்னமேரி. அவளால் அவள் கண்களையே நம்பமுடியவில்லை. தலைகால் தெரியவில்லை, வியர்த்துப் போனாள். அப்பா வாங்கிக் கொடுத்த சாறியின் ராசிப்பலன் வாசல் தேடி வந்திருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டு மெய்மறந்தவளாய் .....

மீண்டும் வருவாள்

-சா (ஜ) ஹாஷ்

## ஆர்மேனியா

கிறிஸ்தவத்தை நாட்டின் சமயமாக முதன்முதல் அறிவித்த நாடு ஆர்மோனியா தான். கி.பி. 303இல் அப்படி அறிவித்தது. மன்னர் 3வது தீர்த்தத் அப்படி அறிவித்தார். கி.பி. 404இல் இரு கிறிஸ்தவர்கள் ஆர்மேனிய எழுத்துக்களை உண்டாக்கி கிரேக்க மொழியிலிருந்து விவிலியத்தை ஆர்மேனிய மொழிக்குத் திருப்பினார்கள். ஆர்மேனியன் விவிலியம் "மொழிபெயர்ப்பு அரசி (Queen of Translation) என்று அழைக்கப்படுகிறது.

## அப்பத்தின் வீடு

'பெத்லகேம் 'என்ற ஊரில் இயேசு பிறந்தார். 'பெத்லகேம் 'என்றால் அப்பத்தின் வீடு என்று பொருள். இதே பெயரில் இப்போது தமிழ் நாட்டிலும் ஓர் ஊர் உள்ளது. தஞ்சை அரண்மனைப் புலவர் வேதநாயக சாஸ்திரியார் "பெத்லகேம் குறவஞ்சி" பாடியிருக்கிறார்.

## திரு. பிலிப் ஜோசப் அவர்கள் காலமானார்



இவர் திரு.மட்.மறை மாவட்ட சமூகத் தொடர்புத் துறையின் முன்னாள் இயக்குனரும், தொண்டன் சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியருமான அருள்தந்தை ஜே.ஏ.ஜி இரட்ணகுமார் அவர்களின் தந்தையாவார். தொண்டன் சஞ்சிகையில் பல ஆக்கங்களை வரைந்துள்ள ஜோசப் அவர்கள் நீண்ட கால தொண்டன் வாசகரும், அபிமானியுமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா இறைசந்நிதியில் என்றும் இளைப்பாற, தொண்டன் இறைஞ்சுகிறான்.

-தொண்டன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உய்யும்




கவிஞர் நிலாதமிழின் தாசன்

மானிடரை மானிடரே வதைத்தல் மாறி
வடிகின்ற குருதிவற்றி ரணங்கள் ஆறி
ஞானமது பெற்றுலகில் மக்கள் கூடி
நல்லன்பு பொழிந்திணைந்து மகிழ்விலாடி
தேனமுதாய் வாழ்வுதனைச் சுவைத்து நாளும்
சீர் பெறவும், வையமதில் அமைதி நீளும்
மேனிலையை உருவாக்க இயேசு பாலன்
மீண்டுமொரு பிறப்பெடுத்தால் உலக முய்யும்

ஆட்கடத்தல் கொலைகளவு அதர்ம ஆட்சி
அவலநிலை அனைத்திலுமே வேண்டும் மீட்சி
சூட்சுமமாய், மக்கள் நலம் பேணும் மேலோர்
சுட்டழிக்கப் படுகின்ற கொடுமை நீங்கி
நாட்டினது சக்தி இளம் மாணாக்கர்தம்
நல்லுயிரைப் பறிக்கின்ற துயரம் ஓய்ந்து
ஆட்டிலறிச் செங்கோலர் அநீதி சாய்க்க
அருட்பாலன் பிறப்பெடுத்தால் அகிலம் உய்யும்.

உண்மைதனை எடுத்துரைப்போர், எழுதுகோலால்
உலகுக்கு நலம்புரியும் கல்வியாளர்
மண்ணகத்தில் நல்லமைதி சமாதானத்துக்காய்
மனமுவந்து பணிசெய்வோர் உயிரை மாய்த்தல்,
வண்ணமுடன் வாழ்ந்தவரை அகதியாக்கி,
வாட்டுகின்ற மாகொடுமை தன்னை நீக்கித்
தண்ணொளியைத் தந்தருளும் தவப் பேறாகத்
தனிறையோன் பிறப்பெடுத்தால் தரணி உய்யும்.







DELANI STORES

Dealers in Groceries,
Stationery
and
Frozen Food




22, BAR ROAD, BATTICALOA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 2006 ஆம் ஆண்டில்



# இயேசு பிறந்திருந்தால்......

இயேசுவின் போதனைகள்
காலத்திற்கேற்ற போதனைகள்
புதிய திராட்சை இரசத்தைப்
புதிய பைகளில் அடையுங்கள்.
அவர் சாதாரண சிற்பி அல்ல
சிற்பிகளுக்குச் சிற்பி மட்டுமல்ல.

காலச்சூழலுக்கு ஏற்ற எதையும்
புது சிருஷ்டியாகக் காணும் சிற்பி
இது நம் சிந்தனைக்கு,
இயேசு என்ன சொன்னார்?

பரிசேயர்கள் என்ன சொன்னார்கள்?
பரிசேயர்கள் சட்டத்தின் வல்லுனர்கள்

கி.மு.1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட
மோசேயின் கற்பனைகளை அனுசரித்தனர்.

சட்டத்தை மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்தனர்
அவர்களுக்கு ஓய்வு நாள் சட்டம் மிகப்பெரிது.

விழுந்தவனைக் கூடத் தூக்கக் கூடாது.
இதனை 1710ஆம் ஆண்டு
இந்தியாவிற்கு வந்த வீரமாமுனிவர் என்ற பெஸ்கி தம்
'பரமார்த்த குரு'
என்ற கதையில் அழகாக விளக்குகின்றார்.
காண்க:
வினோதரச மஞ்சரி.

குட்டையில் விழுந்தார் குரு.
சீடர்களுக்கு எழுதிக்கொடுத்த
ஏட்டில் இருந்ததையெல்லாம்
எடுத்துக்கொண்டனர் சீடர்கள்.

குருவை மட்டும் தூக்கவில்லை
குரு நிர்வாணமாகக் குட்டையில் கிடந்தார்
எழுந்திருக்க இயலாது கிடந்தார்.

எழுதப்பட்ட சட்டங்கள்
இரக்கத்தை மிஞ்சிவிட்டன
"பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்"
இது அன்று யேசு கூறியது
இன்றும் தான்.
இலங்கையில் பிறந்திருந்தால்,
காலத்தின் தேவை
சூழலின் தேவை
மனித உரிமைகளின் அவலம்
வெறுமனே பிச்சையளிக்கும் உலகம்...
அது இருக்கிறவனுக்கு
வாய்ச்சாலம் உள்ளவனுக்கு
தஸ்தாவேஜுக்களை
புதிதாக உருவாக்கக் கூடியவனுக்கு.

தேயிலைத் தோட்டத்
தொழிலாளர்களைப் பாருங்கள்
உங்களுக்கு எங்கே நேரம்?
தேயிலைச் செடிக்குள் தேங்காயும்
மாசியும் இருக்குதென்று தானே
அழைத்து வந்தார்கள்

தேங்காயும் மாசியும் பேசாலையில் கண்ட
எண்ணெய் கிணறுகள் தான்.
தேயிலைத் தோட்ட ஆண் தொழிலாளி
காலை 6மணி முதல் மாலை 6மணிவரை
வேலை செய்தால் அவனுக்குச்
சம்பளம் 156/= ரூபாய்

ஏழு நாட்கள் வேலை செய்யாவிட்டால்
நாளொன்றுக்கான கூலியைக்
கணக்குப் பார்க்க கல்குலேட்டர் உண்டே.

பெண்ணொருத்தி காலை 6.00 மணிக்கு
வேலைக்குச் செல்கின்றாள்.
ஒரு மணித்தியாலம் ஓவர்டைம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்தால் ரூபாய் 10.00.
காலை 6.00 மணிக்குச் சென்று
மாலை 10.00 மணிக்கு வீட்டுக்கு
வருகின்றாள்.

2 வயது, 3 வயது குழந்தையை
உறக்கத்திலே
காண்கின்றாள்,
மீண்டும் அவர்கள் உறங்கும்
போது வேலைக்குச் சென்று
விடுகின்றாள்.

இயேசுவின் மலைப்பிரசங்கம்
இது பற்றியும்
அமைந்து இருக்கும்
உங்களுக்கு சந்தேகமா
சென்று பாருங்கள்

பெண்ணின் பிற உடல் சிறப்புக்களைப்
பற்றி, உடைகளைப் பற்றிப் பேச
இக் கட்டுரை இடம் தரா.

இயேசு பட்ஜட்டைப் பற்றியும் பேசுவார்
இன்னும் பலவற்றைப் பற்றியும்
பேசுவார்
வெளியே சொல்வதற்குரிய
சூழலா இது?

சிந்திப்பதற்கு விட்டுவிடுவோம்
நிச்சயம் மனித உரிமைகளைப்
பற்றிம் பேசுவார்
மனித உரிமைகள்
ஐ.நா, டிக்சநெறியில்
எகிப்திய மம்மிகள் போன்று
புதைபொருளாகி விட்டன.


மனித உணர்ச்சிகளுக்குச்
சமாதி கட்டி
ஆண்டுகள் பலவாகிவிட்டன.
ஏன் யுகங்கள் பல.
ஆனால் நமக்கு ஒரு பெருமை.
இலங்கையில் 90% எழுதப்
படிக்கதெரிந்தவர்கள்
நிச்சயம் யேசுவை
பாரளுமன்றத்திற்குள்
நுழைய விடமாட்டார்கள்
அவர் கொழும்பு நகர புறச்சேரியில்
தான் பிறப்பார்.
அது தான் அவரது மாட்டுத்தொழுவம்.

–அருள் சகோ. S.A.I. மத்தியு F.C.

## அருள் தந்தை ஜோசப் டி கோணிங் அடிகளார் இறைபதமடைந்தார்

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் முன்னாள் குரு முதல்வர் அருள் தந்தை ஜோசப் டி கோணிங் அவர்கள் டிசம்பர் மாதம் 13ம் திகதி அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் தாண்டவன்வெளி வயோதிபர் இல்ல ஆலயத்திலும் மறு நாள் புனித மரியாள் இணைப் பேராலயத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 14ம் திகதி மாலை 3.30 மணி அளவில் மறைமாவட்ட ஆயர் தலைமையில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டபின் நல்லடக்கத்திற்காக ஆலையடிச் சோலை கத்தோலிக்க மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மறை மாவட்ட குரு முதல்வராக, கிழக்கு மனிதவள பொருளாதார அபிவிருத்தி நிலைய இயக்குனராக, புனித மரியாள் இணைப் பேராலயாப்



பங்குத் தந்தையாக என பொறுப்பான பணிகள் பல புரிந்த அடிகளார், நோயாளர்களை ஆசீர்வதித்துக் குணப்படுத்துவதில் மிகவும் புகழ்பெற்றவராக இருந்தார். 1940, 50களில் இப்பணியில் மிகவும் புகழ் பெற்றவராகவிருந்த முத்தையா சுவாமிகளிடம் பயிற்சி பெற்று அவரது சீடராக இருந்த டி கோணிங் அடிகள் அவருக்குப் பின் மிகச் சிறப்பான விதத்தில் இப்பணியை ஆற்றிவந்தார். தேற்றாத்தீவு புனித யூதாததேயு திருத்தலத்தில் பணிபுரிந்த காலத்தில் நோயாளரை ஆசீர்வதிக்கும் பணிமிகவும் புகழ்பெற்றிருந்தது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் தேற்றாத்தீவுக்கு வந்து தங்கியிருந்து அடிகளாரின் ஆசீர்வதாதத்தினால் நலம் பெற்றுச் சென்றனர். இன்றும் கூட அந்த அனுபவங்கள் பலராலும் நினைவுகூரப்படுகின்றன.

முதிர்ந்த வயதிலும் ஓர் இளைஞனுக்குரிய குதூகலத்துடன் வாழ்ந்து மறைமாவட்டத்துக்கு அரும் பணியாற்றிய அடிகளாரின் ஆன்மா இறை சந்தியில் நித்திய இளைப்பாற்றி அடைய வேண்டுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தின் தொன்மை

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்புத் தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்தின் கிழக்குப்புலம் முழுவதுமே எந்தையும் தாயும் மகிழ்ந்து வாழ்ந்தமையை, தீகவாவி, கொட்டியாரப்பற்று, கதிரவெளி, குருக்கல்கின்ன, படியகம்பளை, வெல்லாவ நதிப்படுக்கை, கதிர்காமம், மகாகமை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் மூலம் (செ. கிருஷ்ணராசாவின் இலங்கை வரலாறு பாகம் -1, பக் -83) கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள் உறுதி செய்யும்.

திரு. செ. கிருஷ்ணராசாவின் மேற்படி நூல், 1999ம் ஆண்டு டிசம்பரில் வெளியாவதற்கு சரியாக முப்பதாண்டுகளுக்கு முன்பே (1969ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி) றோயல் ஏசியாற்றி சொசைற்றியில் (Royal, Asiatic Society) உரையாற்றிய பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள், சில தொல்பொருளாராய்ச்சிச் சாதனங்கள், நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ச் சாசனங்கள், பாளி சிங்களச் சரித்திரக் குறிப்புக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் பழைய மட்பாண்டத் தாழிகள் என்பன கி.மு. 2ம் நூற்றாண்டளவில் இலங்கையின் பல பாகங்களிலும் தமிழர்கள் வாழ்ந்துள்ளமையை எடுத்துக் காட்டும் என்று கூறியுள்ளமையை யாரும் மறந்துவிட முடியாது. ஈழத்தமிழரின் இந்தத் தொன்மையை, பேராசிரியர் இந்திரபாலாவின் மாணவரான பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களும் தமது கூர்ந்த ஆராய்ச்சியின் மூலம் உறுதி செய்துள்ளமையை அவரது ஈழத்தமிழர் தொன்மை எனும் நூலில் காணலாம்.






தமிழகத்துக் கிராமங்களிலும், சங்ககாலப் புலவர்களின் நாவிலும் தமிழ்மொழி வீற்றிருந்த அதே காலத்தில் (கி.மு. 500-கி.பி. 200) இலங்கையின் யாழ்குடா நாட்டில் குறிப்பாக கந்தரோடையில் பழந்தமிழ் உபயோகிக்கப்பட்டமையை தொல்லியல் ஆய்வு மூலம் அறிய முடிகின்றது. ஈழத்தின் வடபகுதியில் பேசப்பட்ட பழந்தமிழ், எலு (கொடுந்தமிழ்) ஆகிய மொழிகள் கதிரவெளிக் கிராமத்தைத் தன்னகத்தே கொண்ட மட்டக்களப்புத் தமிழகத்திலும் பேசப்பட்டிருக்கலாம் என்று நாம் ஊகிப்பதில் என்ன தவறிருக்கமுடியும்?

இத்தகு தொன்மையும் சிறப்பும் பொருந்திய மட்டக்களப்புத் தமிழகத்தின் மட்டக்களப்பு எனும் பெயரின் தோற்றம் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடையே நிலவும். எனினும் ம.சற்குணம் அவர்களின் கருத்து மட்டக்களப்பு என்பது, இம்மண்ணின் பல்வேறு பெயர்ச் சொற்கள் போல ஒரு காரணப் பெயர் எனக் காட்டும். இது பற்றி அவர் இப்படி எழுதுகிறார்.

மட்ட என்பது சேறு (சுரி) என்றும் களப்பு என்பது சிறிது நீர் தேங்கி நிற்கும் இடம் என்றும் பொருள்படும். ஓரிடத்திலே கட்டுப்பட்டு நீர் தேங்கி நிற்கும் சேறு பொருந்திய இடம் எனலாம். இதற்கு மட்டக்களப்பினைச் சுற்றி அலங்கரித்துக் கொண்டிருக்கும் வாவியே சான்றாகும். களப்பு எனும் சொல் மட்டக்களப்பில் மட்டும் நீர் தேங்கி நிற்கும் இடத்தினைக் குறித்து நிற்பதும் நோக்கற்பாலது. எனவே மட்டக்களப்பு என்பது 'மட்டுகலப்ப' என்றோ அல்லது 'மடகலப்புவ' என்றோ இருந்து காலப்போக்கில் மட்டக்களப்பு என்றாகியிருக்கலாம். (இளங்கதிர் 17வது மலர் - பக்கம் 47-1965ம் ஆண்டு)

இதில்வரும் மட்ட (මඩ) என்பது ஒரு சிங்களச் சொல் அகும். இது சேற்றினைக் குறிக்கும். இந்தச் சிங்களச் சொல் (மட்ட) சிங்கள அரசர்களின் ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு பல்லாண்டு காலம் இருந்ததன் விளைவு என்பது தெளிவு. இது போல சிங்களச் சொற்கள் சில மட்டக்களப்புப் பேச்சுத்தமிழில் இன்றும் பயன்படுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது... (உ+ம் :- கணகாட்டு, அமாறு, களபுளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து மட்டக்களப்பு மான்மியத்தில் (மட்டக்களப்பு மான்மியம் - 7ம் பக்கம் - 2ம் பதிப்பு - 1998) முற்குகர் (முக்குகர்) பற்றி வரும் கதைக்கும் மட்டக்களப்பு என்னும் பெயரின் தோற்றத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது பெறப்படும். மான்மிய ஆசிரியர் ஒரு முற்குகராக இருக்கக் கூடும் என்று சிலர் ஊகிப்பதால் (மட்டக்களப்பு நாட்டாரியல் பக் 35) அவர் தமது குலத்தின் மேன்மைக்காக அப்படி ஒரு கதையைச் சிருஷ்டி செய்திருக்கலாம் என்று நம்ப இடமுண்டு அல்லவா?

**வாகரைவாணன்**

*(நூல்: பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ்)*




## அன்பான வாசகர்களே!

உங்கள் நண்பர்களுக்கு நத்தார் - புத்தாண்டுப் பரிசாக தொண்டன் ஓராண்டுச் சந்தாவைச் செலுத்தி தொண்டன் வளர்ச்சிக்கு உதவலாமே!

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். சஞ்சிகையுள் இருக்கும் சந்தாக் கூப்பனை நிரப்பி நீங்கள் பரிசளிக்க விரும்பும் நண்பரின் பெயர், முகவரியைத் தெளிவாக எழுதி, கூடவே ஆண்டுச் சந்தாவாக முன்னூறு ரூபாவுக்கான (300/=) காசுக் கட்டளையை 'ஆசிரியர் - தொண்டன்' என்ற பெயருக்கு எடுத்து அனுப்பிவையுங்கள். ஓராண்டுச் சந்தாவுக்கான பன்னிரண்டு வெளியீடுகளை உங்கள் அன்பான நண்பருக்கு ஆண்டு முழுவதும் நாம் அனுப்பிவைப்போம்.

அது மட்டுமா?

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தாக்களைச் சேர்த்து அனுப்பும் தொண்டன் வாசகர்களுக்கு பரிசுகளும் காத்திருக்கின்றன என்பதை மறவாதீர்கள்.



ஆசிரியர்
தொண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

நாம் அன்றாடம் காணும் வாசிக்கும் சில விளம்பரங்கள், சுவரெழுத்துக்கள், துண்டுப் பிரசுரங்கள் துணுக்குகள், என்பன எம்மை வியப்பில் ஆழ்த்தும், சில எம்மைச் சிரிக்க வைக்கும், வேறு சில எம்மை யோசிக்க வைக்கும், இன்னும் சில அழவைக்கும், மற்றும் சில எம்மை குழப்பத்தில் ஆழ்த்திவிடும்.

* கடந்த நவம்பர் 24ம் திகதி தேசிய தமிழ் நாளிதழ் ஒன்றில் காணப்பட்ட விளம்பரம் பின்வருமாறு:

B நெக்கட்டிவ் இன சிறுநீரகம் தேவை. கோயில் பூசாரிமார்கள், பிராமணர்கள், கிறிஸ்தவ பாதிரி மார்கள், அருட்சகோதர சகோதரிகட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

B நெக்கட்டிவ் இன சிறுநீரகம் ஒன்று தேவை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே! ஆனால் தொடர்ந்து வரும் வாசகங்கள்... விளம்பரதாரர் அவர்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

** ** ** **

* ஒரு வீட்டில் சாப்பாட்டுப் பொதிகள் விற்பது வழக்கம்: சுவையான, மலிவான வீட்டுச்சாப்பாடு, எனவே ஏரளமான வாடிக்கையாளர்கள். அவர்கள் வீட்டு வளவில் இருந்து வீதிக்குச் செல்லும் கேற்றில் விளம்பரப்பலகையொன்றை தொங்கவிட்டிருந்தார்கள், அது தான் கொஞ்சம் பயமுறுத்தியது. 'இங்கு சாப்பாட்டிற்கான ஓடர்கள் ஏற்றுக் கொல்லப்படும்.' கொஞ்சம் பயங்கரம்தான்.

** ** ** **

ஒரு பாடசாலையின் கழிப்பறைச்சுவரில் பெண் களைப் பற்றி தரக்குறைவான வார்த்தைகள் எழுதப் பட்டிருந்தன. அதைப்பார்த்த வேறொரு மாணவ னுக்குச் சரியான கோபம். பெண்ணை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் அவன். பெண்ணைப் பெண்ணாய் மதிக்க வேண்டும் என்று சுவரில் எழுத நினைத்தான்; எழுதியும் விட்டான் இப்படி...

பெண்ணைப் பெண்நாய் மதிக்க வேண்டும். நாம் தலையைச் சுவரில்தான் முட்ட வேண்டும்.

** ** ** **

* நவம்பர் 25ந் திகதி சனிக்கிழமை, தொலைக் காட்சி அலைவரிசையொன்றில் கானா உலகநாதன் பாடிய "மீன்களின் கலியாணம்" பற்றிய பாடல் ஒளிபரப்பானது. தமிழ்ப்பாடல் வரிகளின் ஆங்கில மொழியாக்கம் எழுத்து வடிவில் சின்னத்திரையின் அடியில் ஓடிக்கொண்டிருந்தது.

பாடகர் பாரை மீனைப்பற்றிப் பாடிக்கொண்டிருந்தார். பாரைமீனுக்கான மொழிபெயர்ப்பு Rock fish என்று காட்டப்பட்டது. என்ன மொழிபெயர்ப்போ தெரியாது. பாரை மீன் பாறை மீனாகி -Rock fish ஆகி விட்டது போலும், விழி பிதுங்குகின்றது.

** ** ** **

* ஓர் இளைஞன் கொழும்பில் தங்கி கொம்பியூட்டர் ஹாட்வெயார் துறையில் வேலை பார்த்து கொண்டிருக்கின்றான். அவனைப் பார்க்க அவனின் தம்பி கொழும்பு சென்றிருந்தான். தமையன் அறையெடுத்துத் தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்றான். "வீட்டுக்காரர்" அவனை வரவேற்று "தமையன் இன்னும் வரவில்லை" என்று கூறினார். தம்பி சொன்னான் "இன்னும் ஹாட்வெயார் வேலை முடியவில்லை போலும்..." வீட்டுக்காரனின் முகம் சற்றுக்கறுத்து விட்டது. அவர் தம்பிக்காரனிடம் சொன்னார். "உங்கட அண்ணன் கொம்பியூட்டர் கொம்பனியில வேலை செய்கிறார் என்றுதான் நினைச்சனான். இரும்புக்கடையில வேலை செய்கிறாரெண்டு இண்டைக்குத்தான் தெரியும்"

தம்பிக்காரன் திகைத்துப்போனான். இது நடந்தது சுமார் எட்டு, ஒன்பது வருடங்கட்கு முன்பு... இப்போது கொம்பியூட்டர் விசயங்கள் எல்லோருக்கும் அத்துப்படி.

** ** ** **

அண்மையில் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த பத்திரிகைத் துணுக்கொன்று நீங்களும் வாசித்திருப்பீர்கள். ஏ-9பாதை ஒருமுறைதான் திறக்கு மென்றால் யாழ்ப்பாணத்திற்குச் சமான்கள் கொண்டு போற லொறிகளையெல்லாம் துண்டு துண்டாகக் கழற்றி கப்பலில் ஏற்றி திரும்பவும் கொழும்புக்குக் கொண்டு வரணும் போல ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி ... இனி வேறுவிடயத்திற்கு வருவோம். 2007 வருடம் புத்தாண்டாகத் துளிர்விடும் நேரம் அனைவருக்கும் இனிய நத்தார், புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

புதிய ஆண்டில் நீங்கள் எடுக்கப் போகும் தீர்மானம், பிரதிக்ஞை என்ன? பெரிதாகப் பட்டியல் போடவேண்டாம், சின்னதாக இரண்டு காரியங்கள் செய்தால் போதும் ஒன்று - ஒரேயொரு நல்ல பழக்கவழக்கத்தை கடைப்பிடிக்க ஆரம்பிக்க வேண்டும். - அது இராப்படுக்கைக்குப் போகுமுன் பல் துலக்குவதாகக் கூட இருக்கலாம்.

ஒரேயொரு கெட்ட பழக்கத்தை கைவிட்டு விடவேண்டும் - அது மற்றவர் கடிதத்தை இரகசியமாகப் படிப்பதாகக் கூட இருக்கலாம்.

முயற்சி செய்து பார்ப்போமா...?

அத்துடன் தினசரி விவிலியம் சிலவரிகள் வாசித்து தியானிக்க ... செபமாலை சொல்ல ... முயன்று பார்க்கலாம் என்றும் யோசியுங்களேன்... (கிறிஸ்தவர்களைத்தான் சொல்கின்றேன்)

நற்செய்தியாளர் புனித லூக்காஸ் வரைந்த


## அன்னை மரியாவின் படம்



சென்னையை அடுத்துள்ள புனித தோமா மலையில் அன்னை மரியாவின் படம் ஒன்று உள்ளது. இதனை புனித லூக்காஸ் வரைந்தார் என்றும், கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித தோமையார் தமிழ் நாட்டுக்கு வந்த போது இதனைக் கொண்டு வந்தார் என்றும் கூறப்பட்டு வருகிறது.

## மிகப்பெரிய மணி

ஸார் கோலாகொல்



ரஷ்யாவின் மாஸ்கோ நகரத்தில் உள்ள ஸார்கோலோகொல் (Tsarkolokol) என்ற மணிதான் உலகின் மிகப்பெரிய மெகா சைஸ் மணி. இதன் எடை எவ்வளவு தெரியுமா? 216தொன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு

பாதி வாநாள்
பரமன் வீட்டில் கழிக்கும்
பக்திக் குடும்பம்
முதலாம் மாதத்தில்
முதல் பிள்ளைக்குத்
திருமணம்

மூன்றாம் மாதத்தில்
உறுதிப்படுத்தினார்கள்
இரண்டு மாதமென்று

புத்துயிர் பெற்றது வீடு
புதுவுயிரை வரவேற்க

அம்மாவாகப் போகிறவளை
கவனித்தார்கள்
அம்மாவைவிட அன்பாக

சிவப்பாய்ப் பிறக்க
ஆரஞ்சு, கரட்
திடமாய்ப் பிறக்க
இரும்புச் சத்துக்கீரை
சிக்கலின்றிப் பிறக்க
சிமைப்பானம்.

சகல சௌக்கியமும்
தன்னுள் கொண்ட அறை
ஆயத்தப்படுத்தப்பட்டு,
விழித்து முழிக்க
சுவரெல்லாம்
பிஞ்சு முகங்கள்
பொறிக்கப்பட்டன.

ஆயத்த வேலையென
ஏழெட்டு மாதமோடி
ஒன்பது பத்தாகி
பதினோராம் மாதமாக
வந்துதித்தான்
மைந்தன் வீட்டில்

மறுமாதம் மழைமாதம்
மார்கழிக் குளிர்மாதம்
மானிடர் மனக்
கறையெல்லாம்
கழுவும் மழை
பெய் காலம்

வீட்டிலுள்ளோர்
தேடுகின்றனர்

இன்னும் கூட இறைவனுக்கு
தம் மனவீட்டில்
ஓர் அறை ஒதுக்க
இயலாமல்,
வழமை போல்
பழைய பாலன் கூட்டை.

*மிருணா அமல்ராஜ்*
*மூதூர்*



## "தொண்டன்" புதிய ஆண்டில்

### புதிய விடயங்கள்! புதிய பக்கங்கள்! புதிய விலை!

இந்த இதழுடன் தொண்டன் பிரதியொன்றின் விலை இருபது ரூபாவாகிறது. (20/=) நாளும் பொழுதும் விலையேற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் 'தொண்டன்' விலை உயர்வின் நியாயத்தை எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். இந்த விலை உயர்வு மாதம் மாதம் தொண்டனுக்கு ஏற்படும் பாரிய நட்டத்தை சிறிது குறைக்கும் முயற்சியே அன்றி வேறன்று. விலை கூடினாலும் பல புதிய விடயங்களோடும் அதிக பக்கங்களோடும் உங்களைச் சந்திக்க வருவான்.

**வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவரும் தங்கள் மேலான ஒத்துழைப்பைத் தொண்டனுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.**

**அனைவருக்கும் நத்தார் - புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்!**

-நிர்வாகம்-
'தொண்டன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு ஒரு மருந்து



நமது தேவைகள் பெருகிவிட்டதால் பிரச்சனைகளும் பெருகி விட்டன. பிரச்சனைகளால் மனம் அடிக்கடி முறுக்கிக் கொள்கிறது. அதைத் தான் 'டென்சன்' என்கிறோம். அன்றாடப் பிரச்சனைகளால் மனதில் உளைச்சல் ஏற்படுகிறது. மனதில் ஏற்படும் இந்த உறுத்தல்களால் நோய் உண்டாகும். இந்த மனஉறுத்தல்களைப் போக்கும் சிறந்த மருந்தே சிரிப்பு ஆகும். இது சிறந்த டென்சன் றிலீவர். மனிதனுக்கு இயற்கை தந்த வரப்பிரசாதம் சிரிப்பு.

சரி நாம் நினைத்ததும் ஒன்றும் இல்லாததற்கெல்லாம் சிரிக்கமுடியுமா? முன் பின் தெரியாதவர்கள் மத்தியில் உங்களால் சத்தம் போட்டு வாய்விட்டுச் சிரிக்க முடியுமா? பம்பாயில் உள்ள லோக்கானந்தவாலா பூங்காவில் இப்படி வாய்விட்டு, சத்தம்போட்டுச் சிரிப்பவர்களின் கூட்டத்தைக் காணலாம். டாக்டர் மதனம் கட்டாரியா, இப் பூங்காவில் 'சிரிப்பவர்கள் சங்கம்' என்று அகில உலகஅமைப்பை ஏற்படுத்தி சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

இவ்வமைப்பின் உறுப்பினர்கள் நூறுபேர் வரை காலை ஏழு மணி அளவில் இப்பூங்காவில் கூடுவார்கள். இந்தப் பூங்காவில் தூய்மையான காற்றுடன் அன்பும் சிரிப்பும் இலவசமாகக் கிடைக்கிறது!. இவரது 15 நிமிட வகுப்பு பலதரப்பட்ட சிரிப்புகள் கொண்டதாகும்.

நாம் ஆழ்ந்து மூச்சை இழுப்பதைவிட வாய்திறந்து உரக்க சத்தம்போட்டுச் சிரிக்கும்போது ஆறுமடங்கு உயிர்க்காற்று உள்ளே இழுக்கப் படுகிறது. இது செரிமானத்திற்கும் அதற்குச் சாதகமாக உடல் ஓமோன்கள் சுரப்பதற்கும் உதவு கிறது. நாம் சிரிக்கும் ஒவ்வொரு 5 நிமிடச்சிரிப்பும் நமது வாழ்நாளின் 5 நாட்களை நீடிக்கச் செய்யும் என டாக்டர் கட்டாரியா கண்டறிந்துள்ளார். இவ்வமைப்பில் சேர்ந்தவரான உமா மல் கோத்திரா, தான் சேர்ந்த சில நாளில் தனது சர்க்கரை வியாதியும் இரத்த அழுத்தமும் மட்டுப்படுத்தப்பட்டு மேன்மையான வாழ்வை அனுபவிக்க முடியும் என உணர்ந்திருக்கிறார். இது போல் பலர் இவ் வமைப்பின் சிரிப்பாளர் அரங்கத்தில் சேர்ந்து தங்களுடைய நோய் களிலிருந்து குண மடைந்து பலன் அடைந்துள்ளார்கள். சிரிப்பு மிகவும் பழமையானது. இது யோகாவின் ஓர் அங்கம். சக்தியூட்டக் கூடிய தியானத்தின் ஒரு பகுதி. சத்தம் போட்டுச் சிரிக்கும் போது வேறு எண்ணம் எதுவம் ஊடுருவுவது இல்லை. சிரிப்பதால் ஏற்படும் வாய்த்தசைகளின் இயக்கம் உங்கள் மன உறுத்தல்களை வெளியேற்றுகிறது. மௌனமாக வாய் திறக்காமல் பலூன் ஊதுவதுபோல் வாய் குவித்துச் சிரிப்பது ஆஸ்துமா போன்றவைகளுக்கு நல்லது. அது போல் வாய்திறந்து மௌனமாகச் சிரிப்பதும் வயோதிபர்களின் நெஞ்சுத் தொந்தரவுக ளுக்கு நல்லது. உங்கள் இல்லத்தில் அனைவரும் சேர்ந்து சிரிப்பிற்கென நேரம் ஒதுக்குங்கள். பணி புரியும் அலுவலகத்தில், மன மகிழ்மன்றத்தில் தினமும் எல்லோரும் கூடி வாய்விட்டுச் சிரித்து, சிரிப்பு அருமருந்து என்பதை முழுமையாக உணருங்கள். வாய் விட்டுச் சிரியுங்கள்: நோயை விரட்டுங்கள்.

நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சனையையும் நகைச்சுவைக் கண்ணோட்டத்தில் பார்த்தால் மனம் இலேசாக மாறும். நம் சிரிப்பு நம் உள்ளத்திற்கும் வலிமையைத் தரும். மன உறுத்தலையும் எரிச்சலையும் விரட்டி அடிக்கும்.

-டாக்டர். C.K.M. சபாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவுகளோடு எம் உறவுகள்



ஆணிமுத்து
ஜோசப்
24.08.1925





மு. சுரேந்தன்
நிமல்ராஜ்
1988.01.04



லூர்த்துமேரி
ஜோசப்
13.03.1932



ரெஜினோல்ட்
எமிலியானுஸ்
24.05.1962



ரெஜினோல்ட்
சகாயமலர்
05.07.1972



ரெஜினோல்ட்
மதுசா
28.03.1999



ரெஜினோல்ட்
செரோமியா
26.05.2001

ஆண்டு இரண்டென்ன இருபது
ஆனாலும் மாறுமா? இல்லை
மறையுமா? உங்கள் எழுவரின்
இனிய நினைவுகளும்
எம்மோடு வாழ்ந்த சுகமான
காலமும்.
மாறாத மனச் சுமையோடு
வாழ்ந்து, உங்கள் ஆன்ம
இளைப்பாற்றிக்காக
பிரார்த்திக்கும்.
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15 - 02 - 2007




# விவிலியம் கற்போம் - 53

**(விடுதலைப் பயணம் 33: 17,34:9)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம், "நீ கூறியபடியே நான் செய்வேன். ஏனெனில், நீ என் பார்வையில் தயை பெற்றுள்ளாய், மேலும் பெயர் உட்பட உன்னை எனக்குத் தெரியும்" என்றார். அப்போது மோசே, "உம் .............................. எனக்குக் காட்டும்படி வேண்டுகிறேன்" என்று கூற, அவர் "என் நிறை அழகை உன்முன் கடந்துபோகச் செய்து ஆண்டவர் என்ற பெயரை உன் முன் ................................யார் யாருக்கு நான் பரிவு காட்டவிரும்புகிறேனோ அவர்களுக்குப் பரிவு காட்டுவேன்" என்றார். பின்பு, ஆண்டவர் 'இதோ, எனக்கருகில் ஓர் இடம், இங்கிருக்கும் பாறையின் மேல் நீ நின்று கொள். என்மாட்சி ......................... செல்கையில், நான் உன்னைப் பாறைப் பிளவில் நிறுத்தி வைப்பேன். நான் கடந்து செல்லும் வரை என் கையால் உன்னை மூடி மறைப்பேன். பின்பு, நான் என் .................................. ......................... அகற்றுவேன். நீ என் பின்புறத்தைக் காண்பாய். என் முகத்தையோ காணமாட்டாய்' என்றார். ஆண்டவர் மோசேயை நோக்கி, "................................போன்ற இரு பலகைகளை வெட்டி எடுத்துக்கொள். நீ உடைத்துப் போட்ட முன்னைய பலகைகளின் மேல் இருந்த வார்த்தைகளையே நான் இப்பலகைகளின் மேல் ..................... முன்னேற்பாடு செய்து கொண்டு, காலையிலேயே சீனாய் மலைமேல் ஏறிச்செல். அங்கே மலையுச்சியில் என்முன் வந்து நில். உன்னோடு வேறெவனுமே ..............................வேண்டாம். மலையெங்கிலும் எவனுமே காணப்படலாகாது. அந்த மலைக்கு எதிரே ஆடுமாடுகள் மேயவும் கூடாது" என்றார். அவ்வாறே, ................................ முன்னவை போன்ற இரண்டு கற்பலகைகளை வெட்டியெடுத்துக் கொண்டார். ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டபடி, அதிகாலையில் எழுந்து ............................. மேல் ஏறிச் சென்றார். தம் கையில் இரு கற்பலகைகளையும் கொண்டு போனார். ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து, அங்கே அவர் பக்கமாய் நின்று கொண்டு, "..............................." என்ற பெயரை அறிவித்தார். மோசே விரைந்து தரைமட்டும் தாழ்ந்து வணங்கி "என் தலைவரே! நான் உண்மையிலேயே உம் பார்வையில் தயைவு பெற்றவன் என்றால், எம் பாவத்தை மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும் என்றார்.

**விடைகள் : மோசே, ஆண்டவர், ஏறிவர, சீனாய் மலை, மாட்சியை, அறிவிப்பேன், கடந்து, கையை, முன்னவை, எழுதுவேன்,**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 53

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக் கோடிடுக)

1. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று 'பூம்புகார்' என்ற பெயரில் திரைப்படமாக வந்தது.
(மணிமேகலை, வளையாபதி, சிலப்பதிகாரம்)

2. கடந்த ஆண்டின் சிறந்த கிரிக்கட் அணித்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்.
(ராகுல்ட்ராவிட், மஹேலஜெயவர்த்தன, பிரைன்லாரா)

3. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை ஆங்கிலத்தில் சுருக்கமாக இவ்வாறு அழைப்பார்கள்.
(C.B.C, B.B.C, S.L.B.C)

4. கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது. என்ற பாடலை எழுதி புகழ்பெற்ற கவிஞர்
(சுப்பிரமணிய பாரதியார், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, சுத்தானந்தபாரதியார்)

5. 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டு வந்த இலங்கைப் பிரதமர்.
(D.S. சேனநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, S.W.R.D. பண்டாரநாயக்கா)

6. 'நின்றான்' என்பது...
(வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 53
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 51 விடைகள்

மூவாயிரம், ஆண்டவர், பாவத்திற்காக, தெய்வங்களை, நீக்கிவிடும் கூறியுள்ளபடி, சுமத்துவேன், மோயிசனை, வழிமரபினருக்கு, எழுசியர்

## அறிவை வளர்ப்போம் - 51 விடைகள்

1. கொடிலியர் 2. கொபிஅனான் 3. பாதத்தில் 4. இரத்த அமுத்தம்
5. குப்பையிலே 6. இடைப்போலி

**இம்முறை ஒருவர் மட்டுமே இருபிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி பரிசுபெறுவோர்**

- S. கி. கிதர்சனா
  திருக்குடும்ப கன்னியார்மடம்
  தன்னாமுனை

**போட்டியில் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்துப்பரிசுபெறுவோர்**

- புஸ்பலதா கந்தசாமி
  C/o J.B.அவுட்ஸ்கோண்
  15யாட் வீதி
  கல்முனை
- அமிற்றா வாத்லட்
  78 சின்னஉப்போடை
  மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறுவோர்**

- பி. தக்ஷனா
  இல-10 புனிதஜீட்லேன்
  பூம்புகார் வீதி பாலையுற்று
  திருகோணமலை
- லோகநாதன் அன்றுசியாம்
  சோபனம்
  கத்தோலிக்க ஆலய வீதி
  திருக்கோயில்

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

PRESTIGE

*Enjoy a current account*
*That adds to your standing*

*With a current Account from*
*Commercial Bank*
*you have the pride of banking*
*with Srilanka's " Best Bank"*
*as well as the convenience of having*
*the largest computerlinked*
*branch and ATM network*
*at your disposal*

COMMERCIAL BANK
*Our Interest Is in You*

**Commercial Bank**
**Current Account**



அவலங்கள் மறைந்து
அமைதியும் சமாதானமும்
நிறைந்திட அனைவருக்கும்



**கிறிஸ்து பிறப்பு – புத்தாண்டு**
**மற்றும்**
**தமிழ்ப் பொங்கல் வாழ்த்துக்கள்**

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org